விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 28 வெள்ளிக்கிழமை (11.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## வவுனியாவில் இரவு வேளை

# — தாயும் மகளும் — ரி.ஐ.டியினரால் கைது

வவுனியா ஆசிகுளம், தரணிக்குளத்தை சேர்ந்த சசிகரன் தவமலர் என்ற 42 வயதுடைய தாயாரும், அவருடைய மகளாகிய யதுர்சினி என்ற 16 வயது பாடசாலை மாணவியும் கடந்த புதன்கிழமை இரவு பயங்கரவாத குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா கோமரசங்குளம் மகாவித்தியாலய மாணவியாகிய இவர் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்வி பொதுத்தரா தரத் தேர்வு எழுதவுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க..

## மனித உரிமைகள் நிலைவரத்தில் கவலையளிக்கும் நாடாக இலங்கை

### பட்டியலிட்டது பிரிட்டன்

(லண்டன்)

பிரித்தானிய அரசாங்கத்தினால் நேற்றைய தினம் வெளியிடப்பட்டுள்ள மனித உரிமைகள் நிலைவரம் குறித்த அதன் வருடாந்த அறிக்கையில் இலங்கை கவலைக்குரிய நாடொன்றாக பட்டியலிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் (2013) உலகளாவிய ரீதியில் காணப்பட்ட மனித உரிமைகள் நிலைவரம் பற்றிய விபரங்களை உள்ளடக்கியுள்ள அறிக்கையில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் மோசமான முறையில் கவலையளிப்பதாகவே இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையில் அது குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

உட்கட்டமைப்பு மீள் கட்டுமானம் மற்றும் நாட்டின் வடபுலத்தில் முதற்தடவையாக இடம்பெற்ற தேர்தல்கள் உள்ளிட்ட யுத்தத்திற்குப் பின்னரான நிலைவரங்களில் தொடர்ச்சியாக முன்னேற்றம் காணப்பட்டு வந்தபோதிலும் பல விடயங்களிலான ஒட்டுமொத்தப் போக்கானது எதிர்மறையாகவே காணப்பட்டது. ஊடகவியலாளர்களுக்கெதிரான தாக்குதல்கள் தொடர்கதையாகிப்போன நிலையில், இலங்கை பத்திரிகை சுதந்திரம் மற்றும் பெண்கள் உரிமைகள் குறித்து வெளியாகியிருந்த சுயாதீனமான சுட்டிகளில் இடம் பிடித்திருந்தது.

பிரதம நீதியரசரைப் பதவி நீக்கம் செய்தமையானது தண்டனையிலிருந்து தப்பித்

19 ஆம் பக்கம் பார்க்க..

## பாகிஸ்தான் தளபதி யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் ரஷாட் மஹ்மூத் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தபோது பலாலி படைத் தலைமையகத்தில் இராணுவத்தினரால் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

அதேவேளை யாழ்.மாவட்ட இராணுவக கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் தலைமைத் தளபதிக்கு யானைச் சின்னம் ஒன்றினையும் வழங்கினார்.

20 ஆம் பக்கம் பார்க்க..

## கோதுமை மா தொழிற்சாலையில் தீ விபத்து!

(திருகோணமலை)

திருகோணமலையில் அமைந்துள்ள கோதுமை மா தொழிற்சாலை ஒன்றில் நேற்று மதியம் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இராணுவம் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

தொழிற்சாலையில் உள்ள இயந்திரம் ஒன்றில் ஏற்பட்ட எரிவாயு கசிவினால் இந்த தீ விபத்து ஏற்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

தீயினால் தொழிற்சாலையின் ஒரு பகுதிக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இராணு வப் பேச்சாளர் மேலும் கூறினார். (செ-11)

## பகலிலும் மோட்டார் சைக்கிளில் பிரதான விளக்குகளை ஒளிர விட கோரிக்கை

(கொழும்பு)

இன்று தொடக்கம் பகல் வேளைகளில் மோட்டார் சைககிள்களின் பிரதான விளக்குகளை ஒளிரச் செய்யுமாறு நாடளாவிய ரீதியில் மோட்டார் சைக்கிள் சாரதிகளிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கடந்த காலப் பகுதிக்குள் மோட்டார் சைக்கிள் விபத்துகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையால் வீழ்ச்சியடைந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண குறிப்பிடுகின்றார்.

கடந்த வருடத்தின்

20 ஆம் பக்கம் பார்க்க..

## உள்ளக பொறிமுறை என்பது காலம் கடந்த வாதம்

### குல்தீப் நாயர் சுட்டிக்காட்டு

(டெல்லி)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்டமீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உள்ளக பொறிமுறை மூலம் பதிலளிக்க முடியும் என்பது காலம் கடந்த வாதம் என இந்தியாவின் மூத்த ஊடகவியலாளர் குல்தீப் நாயர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இந்தியாவில் இருந்து வெளிவரும் மெயின்ஸ்ரீம் வார இதழில் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதில

20 ஆம் பக்கம் பார்க்க..

விசா ஆலோசனையில் புத்தாண்டுச் சலுகைகள்

★ அவுஸ்திரேலியா குடும்பமாகச் செல்லலாம்.
★ கனடா : சுகாதார துறைசார்ந்தோர், Electricians, சமையலாளர், வெல்டேர்ஸ் IELTS தேவையில்லை.
★ இத்தாலி இலகுவில் பறக்கலாம்.
★ சைப்பிரஸ், நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை.

இன்றில் இருந்து 15-04-2014 வரை அனைத்து விசா ஆலோசனைகளிற்கும் 10% கட்டணக் கழிவு. புத்தாண்டு அன்றும் திறந்திருப்போம்.

(அனைத்தும் நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

இல. 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். தொ. பே: 021 221 9016, 021 499 3502

(C-6996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுப்பிரார்த்தனை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணிக்கு திருமுறை கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

பண்ணிசை ஆசிரியர் தாவடியூர் கே.எல். ஆர்.திருஞானசம்பந்தனின் நெறிப்படுத்தலில் நடத்தப்படும். இப் பிரார்த்னையில் இந்து ஆலயங்களின் திருமுறை ஓதுவார்களும் கலந்து கொண்டு பயன்பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய யோகாசன தியான வகுப்புகள் வேதாந்த மடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இணையவிரும்புபவர்கள்நேரில்பதிவுகளைமேற் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (செ)

# வாகன திருட்டுடன் தொடர்புபட்ட 8 பேர் கைது; உடைமைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட 8 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து சில வாகனங்கள் முழுமையாகவும் பகுதியாகவும் மீட்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவு உட்பட பல் வேறு இடங்களிலிருந்து களவாடப்பட்ட பொருட்களில் 5 மோட்டார் சைக்கிள்கள் முழுமையாகவும், புன்னாலைக்கட்டுவனிலிருந்து திருடப்பட்ட ஸ்கூட்டி பெப் மோட்டார் சைக்கிளின் பகுதி பாகங்கள், துவிச்சக்கர வண்டி, மடிக்கணினி என்பனவற்றையும் மேற்படி சந்தேக நபர்களிடமிருந்து சுன்னாகம் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.





சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் துஸ்மந்த தலைமையிலான பொலிஸ் குழுவினரே நேற்று முன்தினம் சந்தேக நபர்களையும் கைது செய்து இவ் உடைமைகளை மீட்டெடுத்தனர்.

கைதான நபர்கள் அனைவரும் நேற்றைய தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிவான் சந்தேகநபர்கள் அனைவரையும் எதிர்வரும் 23-ம் திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறு உத்தரவுபிறப்பித்துள்ளார். (செ-11)

# பேஸ்புக்கை பயன்படுத்தி சிறுவர் துஷ்பிரயோகம்

## கணனி உயர் அதிகாரி கைது

(கொழும்பு)

பேஸ்புக் சமூக வலைத்தளம் ஊடாக சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சித்த நபரை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் கைது செய்துள்ளனர்.

இணையத்தளங்கள் மூலமாக இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை கண்காணிக்க அதிகாரச் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சைபர் வோச் நடவடிக்கை ஊடாக இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீரிகம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதான இந்த நபர், இலங்கையில் உள்ள முன்னணி சுற்றுலாத்துறை போக்குவரத்து நிறுவனத்தில் கணனித்துறையில் உயர் அதிகாரியாக பணி புரிந்து வருவதாக தெரிய வருகிறது.

இந்த நப்ர், பேஸ்புக் கணக்கின் ஊடாக சிறுவர்களுடன்தவறான தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிப்பதாக சைபர் வோச் குழுவினருக்கு தெரியவந்ததை அடுத்து, அவர் குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்த அதிகாரிகள் சிறுவன் ஒருவரை தேடி, அந்த நபர் வந்த போது கைது செய்துள்ளனர்.

சைபர் வோச் குழுவினர் இதற்கு முன்னர், குருநாகலில் உள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான தென்னந்தோட்டம் ஒன்றின் முகாமையாளரை கைது செய்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பொலிஸில் ஆஜராகுமாறு ஞானசார தேரருக்கு உத்தரவு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜாதிக பல சேன என்ற அமைப்பினால் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் குழப்பம் விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜாதிக பல சேனா என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் புகுந்து, அமைப்பைச் சேர்ந்தவர்களை கலபொட அத்தே ஞானசார தேரர் கடுமையாக எச்சரித்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும நோக்கில் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரரை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு கொம்பனி தெரு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# சிறுவனைக் கடத்திச் சென்று கப்பம் பெற முயற்சி!

## மூவர் கைதாகினர்

சிறுவன் ஒருவரை கடத்திச் சென்று கப்பம பெற முயற்சித்த மூன்று பேரை மாளிகாவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாளிகாவத்தை தொடர்மாடி வீடமைப்புத தொகுதியில் வசித்து வரும் 8 வயதான சிறுவன பகுதி நேர வகுப்புக்கு சென்றிருந்த நிலையில் வீடு திரும்பவில்லை.

இந்தநிலையில், நேற்று முன்தினமிரவு சிறுவனின் பெற்றோருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர், அவர்களின் மகன் தன்னிடம் இருப்பதாக கூறியுள்ளார்.

பிள்ளையை விடுவிக்க வேண்டுமாயின் தமக்கு 30 லட்சம் ரூபா வழங்கப்பட வேண்டும என தொலைபேசியில்பேசிய நபர்குறிப்பிட்டுள்ளார்.

பணத்துடன்வத்தளை, ஹுணுப்பிட்டிய ரயில நிலையத்திற்கு வருமாறும் இது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டாம் எனவும அந்த நபர சிறுவன் தந்தையை அச்சுறுத்தியுள்ளார்.

எனினும் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய சிறுவனின்தந்தை பணத்துடன் ரயில் நிலையத்திற்கு சென்றதுடன் பொலிஸாரும் அங்கு சென்றிருந்தனர்.

கொழும்பு நோக்கி செல்லும் ரயிலில் ஏறி பணம் இருக்கும் பையை ரயிலில் இருந்து தூக்கி எறியுமாறு சந்தேக நபர்கள் தொலைபேசி வழியாக சிறுவனின் தந்தைக்கு அறிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கூறியபடி சிறுவனின் தந்தை பணப்பையை ரயில் இருந்து தூக்கி எறிந்த போது பொலிஸாரும் ரயிலில் இருந்து அந்த இடத்தில குதித்துள்ளனர்.

ரயில் இருந்து குதித்த பொலிஸார், பணப் பையை பெற வந்திருந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து ஹுணுபபிட்டிய ரயில் நிலையத்தின் அருகில் வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவன் மீட்கப்பட்டார்.

அத்துடன் அங்கிருந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

# சிறைக் கைதிகளை பார்வையிட 13,14 ஆம் திகதிகளில் வாய்ப்பு

தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 13ஆம் 14ஆம் திகதிகளில் சிறைக்கைதிகளை சந்திப்பதற்கு அவர்களின் உறவினர்களுக்கு சிறைச்சாலைகள் திணைக்களம் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

குறித்த இரு தினங்களில், காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணிவரை, சிறைக் கைதிகளை பார்வையிடவும் விரும்பினால் உணவுகளை வழங்கவும் முடியும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிசித்தார்.

இதன் பிரகாரம், நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலுமுள்ள கைதிகளை அவர்களின் உறவினர்கள் பார்வையிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சாதாரண நாட்களில் சிறைக்கைதியொருவரைப் பார்வையிட அவரின் உறவினருக்கு சுமார் 10 நிமிடங்கள் மாத்திரமே நேரம் ஒதுக்கப்படும்.

ஆனால், இந்த புத்தாண்டு தினங்களில் சுமார் 30 நிமிடங்கள் வரை சிறைக்கைதிகளைச் சந்தித்து பேச முடியும் என அவர் மேலும் கூறினார். (செ-11)






## என்றும் புன்னகை முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் சிறுவர்களுக்கான என்றும் புன்னகை பாலவிஹார் முகாம் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் ஆரம்பமாகின்றது.

இம் முகாமில் 240க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறவுள்ளனர். (செ-11)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 587 1532




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு-கோப் பாய் பிரதேச செயலகம் நடத்தும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச் சந்தை இன்றும் நாளை சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி இணை ப்பாளர் ஆ.இரகுநாதன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு. சற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வலி. கிழக்கு கோப்பாய் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் இ.ஐங்கரன், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பிரதி அதிபர் சி.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்கம் நடத் தும் வாழ்வின் எழுச்சி புத்தாண்டுச்சந்தை இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை யா/வைத்தீஸ்வரா கல்லூரியில் யாழ். பிரதேச செயலக பிரதேச செய லாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும்.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண உதவி பிரதேச செயலாளர் தனி ஸ்கா வசந்தராஜா, முன்னாள் யாழ். மாநகரசபை உதவி மேயர் தி.இளங்கோ (றீகன்), யா/வைத் தீஸ்வரா கல்லூரி அதிபர் தி.சத்தியபாலன், யாழ். பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.சிவச்சந்திரன் ஆகியோரும் கௌரவவிருந்தினராக அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.வி. குகேந்திரன் (கே.வி. ஜெகன்) ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விரு ந்தினராக பாரம்பரிய கைத்தொழி ல்கள் மற்றும் சிறுதொழில் முய ற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

# திறந்த பல்கலைக்கழகத்தில் பல்வேறு கற்கை நெறிகள்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி, சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறி, இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா, அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி ஆகிய பாடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சமூக விஞ்ஞானத்தில் கலைமானி (BA in Social Science) கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களும் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறியை (Certificate in Social Science) பூர்த்தி செய்தவர்களாகவும் இருக்க வேண்டும். இக்கற்கை நெறியானது மூன்று வருட காலங்களை கொண் டுள்ளது.

சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கை நெறிக்கு (Certificate in Social Science) 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கமுடியும்.

இளைஞர் அபிவிருத் தியியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு (Diploma in Youth Development) விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களிலும் சித்தி பெற்றிருந்தால் விண்ணப்பிக்க முடியும்.

அபிவிருத்தி மற்றும் பொதுக் கொள்கையில் முதுமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் (MA in Development Studies and Public Policy) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பட்டத்துடன் அபிவிருத்தி துறையில். இரண்டு வருட சேவை அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை யாழ்.பிராந்திய நிலையத்தி லும் 155 ஆம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சி கற்கை நிலையத்திலும் பெற்றுக் கொள் ளலாம் என அவர் அறிவித்துள்ளார்.

## ஜய வருடப்பிறப்பு விசேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ் தானத்தில் ஜய வருடப்பிறப்பு விசேட அபி ஷேகம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் அதிகாலை 6.11 மணி க்கு மூலமூர்த்தி விநாயகப் பெருமானுக்கு விஷேட பூஜை நடைபெற்று அதன் பின்னர் பஞ்சமுக விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வரும் திருக்கோலக்காட்சி இடம்பெறும். (2)

## இராசி பலன்

11.04.2014
(பங்குனி 28, வெள்ளிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
ஏகாதசி முறப்கல் 10.25 மணிவரை
மகம் மாலை 6.33 மணிவரை
இராகுகாலம் 10.36-12.06 மணிவரை
சுபநேரம் 6.06-7.36 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்** இனிய தகவல்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**இடபம்** விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பிரியம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மிதுனம்** சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், எடுத்த காரியம் எளிதில் கைகூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்கள் சந்திப்பு இடம் பெறலாம், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** குடும்பங்கள் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிங்கம்** விருப்பங்கள் நிறைவேற விநாய கரை வழிபட வேண்டிய நாள், பெரியவர்களின் மனக்குறை வராமல் நடப்பது நல்லது, போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட முற்படுவீர்கள்.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரித்தாலும் சில ஆதாயங்களும் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** எதிர்கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், சேமிப்புகள் உயர்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு, உற்சாகமான நாள்.

**தனுசு** அரைகுறையாக இருந்த வேலைகளை ஒவ்வொன்றாக செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பிரயாண பயமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றமான நாள், போசன சுகமுண்டு, மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள்.

**மீனம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள்.

வளவன்

# இதய அறுவை சிகிச்சை அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நொதேன் சென்றல் வைத்திய சாலையில் இருதய அறுவைச் சிகிச்சையை அறிமுகப்படுத்தும் ஊடக நிகழ்வும் மற்றும் இலங்கையிலும் ஐக்கிய இராச்சியத்திலும் இயங்கும் பொதுத் தொண்டு நிறுவனமான ஒக்சோனியன் காட் பவுண்டேசனின் (Oxonian heart foundation) ஆதரவில் நடத்தப்படும் இருதய நோய்த்தவிர்ப்பு சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பொது நூலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண முத லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (2)

# சர்வதேச ஆபத்தை நாட்டிற்குள் வரவழைத்தது அரசாங்கமே

**கயந்த எம்.பி.குற்றச்சாட்டு**

அரசாங்கமே சர்வதேச ரீதியான ஆபத்தை நாட்டுக்கு வரவழைத்து கொண்டது என ஐக்கிய தேசியக் கட்சியின நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்றதாக கூறப்படும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை நடத்தியிருக்கலாம். அதற்கான சந்தர்ப்பம் இருந்தது.

அரசாங்கம், தான் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தவில்லை.

அரசாங்கத்தின் தவறு காரணமாகவே ஆபத்தை வரவழைத்து கொண்டது.

உண்மையில் அரசாங்கம் கேட்டு வாங்கி கொண்டது. அரசாங்கத்தின் தவறை சர்வதேசம் தனக்கு சாதமாக பயன்படுத்திக் கொண்டது.

போர் குறித்து மட்டுமல்ல, ரத்துபஸ்வல ழக்கள் தண்ணீர் கோரி நடத்திய ஆர்ப்பாட்டம் மீது நடத்தபபட்ட தாக்குதல் தொடர்பான அறிக்கையையும்வெளியிடுமாறு ஜெனீவா யோசனையில் கோரப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எதனையும் அரசாங்கம் விரும்பாது.

சர்வதேசத்திடம் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியதன் காரண்மாகவே நாட்டுக்கு தலை குனிவு ஏற்பட்டுள்ளது.

நாட்டையும், நாட்டு மக்களின் வயிற்றையும் பாதுகாக்க வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஆட்சிக்கு வரவேண்டும்.

சர்வதேசத்தை இராஜதந்திர ரீதியில் முகாமைத்துவம் செய்ய அரசாங்கம் தவறியதால், நாடு பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 90 | 120 | 90 | 120 |
| தக்காளி | 40 | 40 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 90 | 100 | 70 | 100 |
| பூசணி | 25 | 50 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 70-80 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 75 | 80 |
| பாகற்காய் | 140 | 100 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 50 | 80 | 50 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 50 | 50 | 60 |
| கறிமிளகாய் | 90 | 80 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 100-160 | 200 | - | 200 |
| போஞ்சி | 90 | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 10-20 | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 40-90 | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 45 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 90 | 90 | 80 |



யாழ்.மாவட்ட செயலக மனித வள மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனுசரணையில் யாழ்.எய்ட்ஸ் நிறுவனம் சார்பாக கனடாவில் வசிக்கும் ஜெரமிகா என்ற குழந்தையின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு கிளி/முகவில் அ.த.க பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட போது...

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியாக சுகத் ஏக்கநாயக்க

(யாழ்ப்பாணம்)

யாழ்.தலைமைப்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியாக ஈ.எம்.சுகத் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இருந்த சமன் சிகேரா யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதனையடுத்தே





ஏக்கநாயக்க தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏக்கநாயக்க 1987 ஆம் ஆண்டு திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியிருந்ததுடன் , தொடர்ந்து கொழும்பு, அநுராதபுரம், கேகாலை, பொல்காவளை, ரிதிகம, மீதுகம ஆகிய இடங்களில் கடமையாற்றி வந்துள்ளார்.


இறுதியாக கடந்த 7 வருடங்களாக தம்புள்ள தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி தற்போது யாழ்ப்பாணத்தில் இடமாற்றமாக வந்துள்ளார்.


ஏக்கநாயக்கதனது கடமைப்பணிகளையாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 7 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார். (2-4)




# ஒரே இரவில் 10 கடைகள் உடைப்பு நான்கு கடைகள் சூறையாடப்பட்டன

## நல்லூர் ஆலய சூழலில் பெரும் பரபரப்பு







யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவில் பகுதியிலுள்ள 10 கடைகள் ஒரே இரவில் உடைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதோடு பணமும் திருடப்பட்டுள்ளது.

நல்லூர் தெற்கு வீதியில் பருத்தித்துறை வீதியின் ஓரமாகவுள்ள 8 கடைகளும், அரசடி வீதியிலுள்ள 2 கடைகளும் உடைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் அரச வீதியில் உடைக்கப்பட்ட இரண்டு கடைகளிலும் பருத்தித்துறை வீதியில் உடைக்கப்பட்ட 8 கடைகளில் நான்கு கடைகளிலும் எந்தப் பொருட்களும் திருடப்படவில்லை.

ஆனால், கடைகளின் பூட்டுகள் அடித்து உடைக்கப்பட்டதோடு திருட்டு முயற்சிகள் பாரியளவில்மேற்கொள்ளப்பட்டுள்ளமைதெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு மேற்படி கடைகளைப் பூட்டிவிட்டு உரிமையாளர்கள் சென்றுள்ளனர். இந்நிலையில் நேற்றுக் காலை வழமைபோன்று கடைகளைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட வந்த போது ஏற்கனவே கடைகள் திறந்திருப்பதையும் பொருட்கள் வெளியில் சிதறுண்டு கிடந்ததையும் கண்டு உரிமையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

**பியர்ரின்**

திருட்டுப்போன கடையொன்றின் ஓரமாக பியர்ரின் ஒன்றினை பொலிஸார் நேற்றுக்காலை கண்டெடுத்தனர்.

கடைக்குள் இருந்த லாச்சியுடன் கூடிய மேசையொன்று வெளியில் கொண்டு வரப்பட்டு உடைக்கப்பட்ட இத்திலிருந்தே இந்தபியர்ரின்னை பொலிஸார் மீட்டனர்.

**பல இலட்சம்**

சுமார் பத்துக் கடைகளின் பூட்டுக்கள் உடைக்க ப்பட்டு திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் நான்கு கடைகளில் தான் பொருட்கள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸாரின் விசாரணையின் போது தெரி விக்கப்பட்டது.

திருடப்பட்ட கடைகளிலிருந்த புடைவைகள் மற்றும் பான்சி பொருட்கள், பல ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளதா கவும் இவற்றின் பெறுமதியை உடனடியாக தெரிவிக்க முடியாது எனவும் சுமார் 7,8 இலட்சம் ரூபா பெறுமதியான் பொருட்கள் மற்றும் பணம் திருட்டுப் போயிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

**பரபரப்பு**

ஒரே இரவில் 10 கடைகள் உடைத்து திருடப்பட்ட சம்பவத்தால் நல்லூர் ஆலயச் சூழலில் நேற்றுக் காலை பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பொலிஸார் வாகனங்களில் வந்து குவிந்ததோடு இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கையும் அதிகரித்து காணப்பட்டது.

இதேவேளை, தடயவியல் நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளும் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டனர்.

**தொடர்கிறது**

யாழ்.குடாநாட்டில் திருட்டுச் சம்பவங்கள் உட்பட குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பலரை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்திருக்கின்ற போதும் குற்றச் செயல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வர்த்தக நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ள நிலையில், வர்த்தக நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள் தமிழ் வர்த்தகரிடையே பெரும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தென்னிலங்கை வியாபாரிகளினால் தமது வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றது என யாழ்ப்பாணத்து வர்த்தகர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதளபாதாளத்தில் விழ முஸ்லிம்கள் தயாரில்லை

## அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு

நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்க திட்டமிடவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்க திட்டமிட்டுள்ளனர் என்று செய்தி வெளியிடப்பட்டிருந்ததை வாசித்து நான் ஆச்சரியமடைந்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு தீர்மானம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் எடுக்கப்படவில்லை. இந்த நாட்டில் சமாதானத்தையும் சாந்தியையும் கொண்டு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பின்னால் அரசாங்கத்தில் உள்ள சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதுணையாகவுள்ளனர்.

இது தூரநோக்குள்ள செய்தியாகும். இது கறபனையானது. குறிப்பாக ஜெனீவா எம்மை விழுங்க முயலும் இந்த நேரத்தில் எமது நாட்டின் ஒற்றுமையை அழிக்க முயலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் வேறு அரசுக்கு எதிரான சக்திகளின் சதிவேலைகளையிட்டு முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலை புலிகளின் யுத்தம் நடந்த 30 வருட காலத்தில் கிழக்கு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய மாவட்ட முஸ்லிம்கள் கூடுதலாக பாதிக்கப்பட்டனர் என்பதை முஸ்லிம்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

தமது பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்திய தமிழ் பயங்கரவாதிகளின் அழிவு பாதையில் போய் அதளபாதாளத்தில் விழ முஸ்லிம்கள் தயாராகவில்லை.

தமிழீழ விடுதலை புலிகள் அப்பாவி தமிழ் மக்களை பெரும் துன்பத்துக்கு ஆளாக்கியதே கண்ட பலன். சகல அரசாங்க முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் எந்தவொரு வெளிநாட்டு சதிகாரர்களுக்கும் எதிராக எங்கள் தாய் நாட்டை காக்க அணி திரண்டுள்ளனர்.

ஜெனீவா மனிதவுரிமைகள் அமர்வில் இலங்கைக்கு எதிராக கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாக எந்தவொரு முஸ்லிம்களும வாக்களிக்கவில்லை என்பதை நினைவில் கொள்வோம் என்றார். (2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாம்பழத் திருவிழாவும் நாளை சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் நடைபெறும்.

13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (2)

# த.தே.கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும்

## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்டாயம் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆயுத அமைப்பொன்று தோற்கடிக்கப்பட்ட பின்னர், அதன் அரசியல் பிரிவை தடை செய்யாத உலகில் ஒரே நாடு இலங்கை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாக செயற்பட்டுள்ளது.

அதனை தடை செய்யாத காரணத்தினால், விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களின் மனைவிமார் மக்கள் பிரதிநிதிகளாக செயற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்காத அரசினால் பயனில்லை

## சிறிரங்கா எம்.பி. தெரிவிப்பு

அப்பாவி வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்காத அரசாங்கத்தினால் எந்தப் பயனும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொதுமக்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்படவில்லை.

கசினோ சூதாட்டத்தில் ஈடுபடும் நபர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு நலன்களை வழங்காத எந்தவொரு அரசாங்கத்தினாலும் பயன் கிடையாது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கூட உயர்த்தப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்ட மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். அது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# சர்வதேசத்தின் கோரிக்கைகளை இலங்கை செவிமடுக்க வேண்டும்

சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளை இலங்கை செவிமடுக்க வேண்டும் என்று பிரித்தானிய வெளியுறவு அலுவலக அமைச்சர் ஹூகோ ஸ்வைரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக இலங்கைக்கு செய்தியை அனுப்பியிருக்கிறது.

இந் நிலையில் அந்த சர்வதேச சமூகம் எதனை எதிர்ப்பார்க்கிறது, எதனை கேட்கிறது என்று இலங்கை ஆராய வேண்டும் என்று அமைச்சர் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் நடத்தப் போகும் மனிதவுரிமைகள் தொடர்பான விசாரணைகள் மூலம் இலங்கைக்கு நன்மைகளே கிடைக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மனிதவுரிமைகள் பேரவையின் சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று இலங்கை அறிவித்துள்ள நிலையிலேயே பிரித்தானிய அமைச்சர் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார். (2)


உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர்.எஸ். எஸ். சர்மா (குருஜீ) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.

T.P.0777064247

(6023)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 40
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, Hotel Management / Hotel (ஜேர்மன் - Work Permit)
தொ.இ: B/1244

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா: 23.5
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L /வியாபார ஊழியர்
தொ.இ: B/1251

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 2
கி.பா: 28.75
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L / பதில் பொறியியலாளர்
தொ.இ: B/1253

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 50 சூரி செவ் 4 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BDS / பல் வைத்தியர்
தொ.இ: B/1254

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: 53.75
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1815

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 30 சூரி செவ் 5 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/1820

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 2
கி.பா: 16 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA, MBA
தொ.இ: G/1822

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 18 .
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
தொ.இ: G/1824

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூநகரி கடைத்தொகுதிகளில் வெளிமாவட்ட வியாபாரிகள்

## உள்ளூர் வர்த்தகர்கள் கொந்தளிப்பு



பூநகரி பிரதேச சபையினால் வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக 14 மில்லியன் ரூபா செலவில் புதிய சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்ட 32 கடைத் தொகுதிகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டு வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டமைக்கு உள்ளூர் வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி 32 கடைத்தொகுதி அமைக்கப்பட்டு 5 மாதங்களாக வியாபார நடவடிக்கைகளுக்கு விடப்படாமல் பூட்டி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமைபிரதேச சபையினரால் இக் கடைத் தொகுதிகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டன. இதனூடாக பூநகரி பிரதேசத்துடன் வியாபாரத் தொடர்பு இல்லாத வெளி மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வியாபாரிகள் குறித்த கடைத் தொகுதிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனினும், பூநகரி வாடியடியில் நிரந்தர கடைகளை நடத்தி வந்த 60 வியாபாரிகளிடம் குறித்த கடைத் தொகுதிகளை வழங்குவதாக பிரதேச சபையினர் உறுதியளித்திருந்தனர்.

இந்நிலையில் 60 கடை உரிமையாளர்களிடமும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் 2 வருடங்களுக்கு முன்னர் பிரதேச சபையினர் பணத்தை பெற்றுள்ளனர்.

எனினும் கடைத்தொகுதிகள் அமைக்கப்பட முன்னர் முற்பணம் பெற்ற வியாபாரிகளுக்கு அத்தொகையும் மீளளிக்கப்படாமல் கடைகளும் கிடைக்காமல் போயுள்ளது.

இவ்வாறாக முற்பணம் பெற்ற வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படாமல் வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு கடைத் தொகுதிகள் வழங்கப்பட்ட செயல் கவலையளிப்பதாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் முற்பணம் கொடுத்த பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட வியாபாரிகள் தற்போது கடைத் தொகுதிகள் வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

இவ் வியாபாரிகள் தமக்கு நீதி கோரி சட்டத்தை நாடவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (9-84)

# விசேட கல்வி செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் விசேட கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் நாளையும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரைவலயக்கல்வி பணிமனையிலுள்ள விசேட கல்வி வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல், இனங்காணல் ஆகியவை பயிற்றுவிக்கப்படவுள்ளன.

எனவே பாடசாலைகளில் விசேட கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை இச்செயலமர்வில் பங்குபற்றுமாறும் பிறிஸ்ரல் போட், ரிசு, நூல், ஈர்க்கு, ஏ4 கலர் பேப்பர், கம்பி, கத்தரிக்கோல், பைண்டகம், காந்தம் சிறிய துண்டு ஆகியவற்றை கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9-254)




# ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 233 புதிய வீடுகள் பூர்த்தி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்வின் பின்னர் மீள்குடியேறியுள்ள 5 ஆயிரத்து 600 குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3ஆயிரத்து 233 குடும்பங்களுக்குரிய புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதோடு ஏனைய வீடுகளும் அமைக்கப்பட்டு வருவதாகவும் சேதமடைந்த 346 வீடுகளில் 287 வீடுகள் திருத்தி அமைக்க அனுமதி கிடைத்த நிலையில் 239 வீடுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலர் எஸ். குருபரன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் வீட்டுத்திட்டங்கள் தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லை.மாவட்டத்தின் இடம்பெயர்வின் பின்னர் மூன்றாவது பிரதேச செயலர் பிரிவான ஒட்டுசுட்டான் மக்கள் அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், பல்வேறு அரச, அரச சார்பற்ற அமைப்புக்களால் ஆயிரத்து 648 புதிய வீடுகள் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இதன்படி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 390 வீடுகளும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அரச உத்தியோகத்தர்களுக்கு 50 வீடுகளும் உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் வடக்கு, கிழக்கு வீடமைப்பு புனர்வாழ்வு திட்டம் ஊடாக 408 வீடுகளும் யு.என்.கபிராற் நிறுவனம் மூலம் 607 வீடுகளும் இலங்கை சர்வோதய அமைப்பினூடாக 8 வீடுகளும் இலங்கை சமூதாய நல்லொழுக்க முன்னேற்ற நிறுவனத்தின் மூலம் 50 வீடுகளும் மீள்குடியேற்ற அமைச்சினூடாக 12 வீடுகளும் சுவாமி இராமதாஷ் நிறுவனத்தினூடாக ஒதியமலை கிராமத்தில் தலா 8 இலட்சம் ரூபா பெறு மதியில் 49 வீடுகளுமாக மொத்தம் ஆயிரத்து 648 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சேதமடைந்த 239 வீடுகளும் இக் கால பகுதியில் யு.என்.கபிராற் நிறுவனத்தினூடாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்திய அரசின் அனுசரணையுடன் முதலாம் கட்டமாக கற்சிலை மடு கிராமத்தில் 140 வீடுகளும் இரண்டாம் கட்டமாக பழம்பாசி கிராமத்தில் 150 வீடுகளும் ஒட்டுசுட்டானில் 51, மணவாளன் பட்டமுறிப்பு கிராமத்தில் 80 வீடுகளுமாக மொத்தம் 281 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக முத்தையன் கட்டு கிராமத்தில் 91 வீடுகள், அம்பகாமத்தில் 58 வீடுகளும் திருமுறிகண்டி இந்துபுரம் கிராமத்தில் 127 வீடுகளும் காதலியார் சமணன் குளத்தில் 143 வீடுகளுமாக மொத்தம் 419 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நான்காம் கட்டத்தில் ஒலுமடுவில் 74, மாங்குளத்தில் 173, பனிக்கன் குளத்தில் 24, திருமுறிகண்டியில் 191 வீடுகளுமாக மொத்தம் 462 வீடுகளுக்குரிய பயனாளிகள் தெரிவு இடம்பெற்று ஆவணங்கள் கோவைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது, இந்திய அரசின் ஐந்தாம் கட்டத்தின் மூலம் முத்து விநாயகபுரத்தில் 35, கருவேலன் கண்டலில் 37, தட்டைய மலையில் 59, கனகரட்ணபுரத்தில் 55,வித்தியாபுரத்தில் 137 மாக மொத்தம் 323 வீடுகளுக்குரிய பயனாளிகள் தெரிவு இடம்பெற்று ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு வருகின்றன.

இன்னும் மீதமுள்ள கிராமங்களிலுள்ள குடும்பங்களிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்வதன் ஊடாக எதிர்காலத்தில் தனிநபர் மற்றும் இரு நபர் கொண்ட குடும்பங்கள் தவிர்ந்து ஏனைய குடும்பங்களுக்குமாக 800 இற்கு மேற்பட்ட வீடுகள் தேவைப்படுகின்றன என்றார். (9-15)

# மோட்டார் சைக்கிள் விபத்து; கணவன்-மனைவி படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவனும் மனைவியும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஏ9 வீதியினூடாக வவுனியா நோக்கி இவர்கள் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் தாண்டிக்குளம் சந்திப் பகுதியில் திரும்ப முற்பட்ட வேளை டிமோ பட்டா வாகனத்துடன் விபத்துக்குள்ளாகியது.

இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250)








உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி விவசாய திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான நிலக்கடலை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் விவசாயிகளுக்கு நிலக்கடலைகள் வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சிவநகர், மானிப்பாய் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சநீதிமன்றினூடாக நிருபிப்பதன்மூலம் பட்டியலில் இருந்து பெயரை நீக்கலாம்

## பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

**புலிகளுடன் தொடர்புடைய 16 அமைப்புகளுக்கும் 424 உறுப்பினர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை இலங்கை அரசாங்கத்தின் திடீர் முடிவு அல்ல 2008 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாதச் செயற்பாடு களுடன் தொடர்புடையவர்கள் பற்றி சேகரித்த தகவல்களின் பிரகாரமே தடை செய்யப்பட்ட அமைப்புக்களினதும் நபர்களினதும் பெயர் விபரங்களை உத்தியோகபூர்வமாக வெளியிட முடிந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.**

கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் உயிரிழந்துள்ள போதிலும் அவர்களது சொத்து விபரங்களை அடிப்படையாகக் கொண்டே அந்நபரகளின் பெயர் விபரங்களும் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

தடை செய்யப்பட்டுள்ள பெயர் பட்டியலில் இடம்பிடித்துள்ளவர்கள் தாங்கள் நிரபராதி என கருதும் பட்சத்தில் சட்ட திட்டத்திற்கமைய உச்ச நீதிமன்றத்திற்கூடாக தமது நியாயங்களை நிரூபிப்பதன் மூலம் பட்டியலிலிருந்து தமது பெயரை நீக்கிக் கொள்ள முடியும்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மற்றும் உதவிய அமைப்புக்கள் மற்றும் நபர்களை தடை செய்துள்ளமையானது இலங்கை அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடல்ல. வெளிவிவகார அமைச்சு, நீதியமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சு, இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் ஒன்றிணைந்த கூட்டு நடவடிக்கையாகும்.

வடக்கைச் சேர்ந்த அரசியல் வாதியொருவர், இலங்கை அரசாங்கம் எதற்காக இவ்வளவு காலத்திற்குப் பின்னர் பயங்கரவாத அமைப்புக்களையும் அதில் செயற்பட்ட நபர்களையும் தடை விதிக்க வேண்டுமென கேள்வியெழுப்பியுள்ளார். அவருக்கு இது புதிதாக திடீரென எடுக்கப்பட்ட தீர்மானமல்லவென்பதனை நான் எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை எண் 1373 இன் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கம் இத்தீர்மானத்தினை எடுத்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை சாசனத்தில் இத்தீர்மானம் உள்வாங்கப் பட்டது முதலே நாம் இது தொடர்பில் செயற்பட ஆரம்பித்து விட்டோம். மத்திய வங்கியின் உதவியுடன் கட்டம் கட்டமாக இது தொடர்பிலான தகவல் திரட்டப்பட்டன. அந்த வகையில் 2008 ஆம் ஆண்டு திரட்டப்பட்ட தகவல்களில் பாரிய முன்னேற்றத்தினைக் காணக்கூடியதாகவிருந்தது.

அதனைத் தொடர்ந்து 2012ஆம ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வெளியான இலக்கம் 1760/40 என்ற வர்த்தமானி அறிவித்தலில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் உதவுபவர்கள் அல்லது அமைப்புக்களை தடை செய்வது மற்றும் அவர்களுக்குரிய சொததுக்களை பறிமுதல் செய்வது தொடர்பில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரங்களின்று அமைப்புக்களையோ அல்லது தனிநபர்களையோ பயங்கரவாதச் செயற்பாட்டுடன் தொடர்புடையவையென எம்மால் குற்றம் சுமத்த முடியாது. எனவே தான் தீர ஆராய்ந்த பின்னர் பெயர் வபரங்களை வெளியிட்டுள்ளோம். சரியான தகவல்களையும் ஆதாரங்களையும் திரட்டுவதற்கே எமக்கு இவ்வளவு கால அவகாசம் தேவைப்பட்டது என்றும் அவர் கூறினார்.

பட்டியலில் இடம் பிடித்தவர்கள் உயிரிழந்திருந்தாலும் வெளிநாடுகளில வசித்தாலும் இலங்கையிலுள்ள அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவது உறுதி எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (2)

# இறந்த இலங்கையர்களின் உடற்பாகங்கள் விற்பனை

## அமைச்சர் டிலான் அதிர்ச்சித்தகவல்

மத்திய கிழக்கு நாடுகளில் உயிரழக்கும் இலங்கையர்களின் உடற்பாகங்களை விற்பனை செய்யும் நடவடிக்கை குறித்த தகவல் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஏதேனும் விபத்துக்கள் அல்லது வேறு காரணிகளினால் மூளை, இறக்கும் நபர்களின் உடற்பாகங்கள் இவ்வாறு கொள்ளையிடப் படுகின்றன.


உடற்பாகங்கள் விற்பனை செய்யப்படுவது குறித்த தகல்கள் கிடைக்கப் பெற்ற போதிலும் அதனை இன்னமும் சரியாக உறுதி செய்து கொள்ள முடியவில்லை.

எதிர்காலத்தில் இது தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

மத்திய கிழக்கில் உயிரிழப் போரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்தால் உள்நாட்டிலும் உயிரிழந்த நாட்டிலும் பிரேதப் பரிசோதனை நடத்த முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

# நாட்டின் அபிவிருத்திக்கு குருமாரின் ஆசி வேண்டும்

## அமைச்சர் பசில் கோருகிறார்



இலங்கையின் அபிவிருத்திகளுக்காக பௌத்த மதகுருமார் உட்பட அனைத்து மதகுருமாரின் ஆசிகளையும் ஆலோசனைகளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எதிர்ப்பார்ப்பதாக பொருளாதாரத் துறை அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர்மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுதந்திரத்துக்கு பின்னர் தற்போது நாடு அதீத அபிவிருத்திகளை அடைந்து வருகிறது

எதிர்க்கட்சிகள் அபிவிருத்திகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றன. எனினும் அந்த கட்சிகளில் உள்ள பலர் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை கண்டு பொறாமைப்படுகின்றனர்.

இந் நிலையில் அண்மையில் மாகாணசபைகளில் அரசாங்கத்துக்கு கிடைத்த வெற்றியும் அதன் அபிவிருத்திகளை மையமாகக் கொண்டே கிடைத்தது

மக்கள் இந்த அபிவிருத்திகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளமையால் தாம் ஆட்சிக்கு வரமுடியாதிருக்கும் என்பதன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின் அபிவிருத்திகளை குறை கூறுகின்றன என்றார். (2)

# வரிச்சுமை மக்கள் மீது திணிப்பு-ஜே.வி.பி.

அரசாங்கம் இனவாதத்தை தூண்டி வருவதாகவும், இனவாத அடிப்படையில் செயற்படும் தரப்பினருக்கு அரசாங்கம் ஆதரவளித்து வருவதாகவும் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

தேசத்தை கட்டியெழுப்பும் வரி என நுகர்வு பொருட்களுக்கு மூன்று வீத வரி அறவீடு செய்யப்படுகின்றது.

இதன் மூலம் அரசாங்கம் எந்தப் பக்கத்தில் தேசத்தை கட்டியெழுப் பியுள்ளது.

தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

இனவாத அமைப்புக்களை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது.

வரிச்சுமை மக்கள் மீது திணிக் கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பெரும் நெருக் கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்

அன்றாடம் உணவு உட்கொள்ளவே முடியாத நிலையில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (2)

# ஐ.நா. சபையின் யோசனைக்கமைய 16 தமிழ் அமைப்புக்கள் மீது தடை

## ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி விளக்கம்

பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே வெளிநாடுகளில் உள்ள பிரிவினைவாதத்துக்கு உதவும்16 அமைப்புக்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டன என ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹன தெரிவித் துள்ளார்.

இலங்கையின் அரச பத்திரிகைக்கு தகவல் அளித்துள்ள அவர், அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றிய யோசனையின் அடிப்படையிலேயே இந்தத் தடை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த தடையின்கீழ், மேற்கத்தேய நாடுகளில் திறந்த நிலையில் செயற்படும் குறித்த அமைப்புக்கள் இலங்கையுடன் மறைமுகமாக தொடர்புகளை கொண்டிருப்பதாகவும் அது தடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கைக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ஆர சம்பந்தன் எதிர்ப்பு வெளியிட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட அவர், ஒரு பிரிவினரின் கருத்துக்களுக்காக நாட்டின் எதிர் காலத்தை விட்டுக் கொடுக்க முடியாது என்றார். (2)



காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் வாழ்வின் எழுச்சிப் புத்தாண்டுச் சந்தை நேற்று முன்தினம் காரைநகர் சுப்ரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார் சிவசிறி வீ. ஈஸ்வரக் குருக்கள் நாடாவை வெட்டி சந்தையினை திறந்து வைப்பதையும் கலந்து கொண்ட ஒருபகுதியினரையும் விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருட முடியாத கடவுச்சொல் நுணுக்கம் கண்டுபிடிப்பு



ஒன்லைனில் ஹேக்கிங் அதிகரித்து வரும் இந்த காலகட்டத்தில் ஒன்லைன் கணக்குகள் மற்றும், அதன் கடவுச்சொற்களை பாதுகாப்பாக வைக்க முடியாமல் போகிறது. ஆனால இனி அந்த கவலை இல்லை.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்-ன் ராஸ் அல் கைமா-ல் உள்ள ZSS ஆராய்ச்சி மையத்தை சேர்ந்த Ziyad Al-Salloum என்ற விஞ்ஞானி, ஒன்லைன் கணக்குகளை ஹேக்கர்களிடமிருந்து பாதுகாக்கும் புதிய முறை ஒன்றை கண்டுபிடித்துள்ளார்.

இந்த செயற்றிட்டத்திற்கு புவியியல கடவுச்சொற்கள்(Geographical Pass words) என பெயரிட்டுள்ளார்.

இதன் மூலம் பல்வேறு நிறுவனங்களுக்கு பாதுகாப்பான அணுகல் (Secure Access) வழங்க முடியும் என்றும், இது ஒரு எளிய மற்றும் நடைமுறை அணுகுமுறையே எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய வழிமுறையில் அணுகல் சான்றுகளாக (Access Credentials) நமக்கு பிடித்த இடத்தின் பெயரை பயன்படுத்தலாம் என்று கூறியுள்ள Ziyad, இதற்கு நமது அதிக நினைவாற்றலுக்கு பதிலாக எளிமையான ஞாபக சக்தியே தேவைப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளர்கள் ஒரே இடத்தின் பெயரை தெரிவு செய்யலாம்.

ஏனென்றால் இந்த முறையின் மூலம், திரைக்கு பின்னால் அவர்களுக்கு தனிப்பட்ட கடவுச்சொல் அமைப்புகள் அமைக்கப்படும்.

தற்போது செய்யப்பட்டுள்ள முன்மாதிரி அமைப்பானது, இதுவரை கணனியில் அறியப்பட்ட கடவுச்சொல் அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்பை தரும் திறனை பெற்றுள்ளது.

ஆனால் வழக்கமான கடவுச்சொற்களை நாம் எவ்வளவு வலுவான முறையில் அமைத்தாலும் ஹேக்கர்களால் பாதுகாப்பிற்கு ஆபத்து இருக்கிறதென்றும், தங்கள் ஹேக்கர் கருவிகள் மூலம் சர்வர்களுக்குள் நுழைந்து கடவுச்சொற்களை வெளிப்படுத்த அவர்களால் முடிகிறது என்றும் அந்த விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

# சம்சுங் அறிமுகப்படுத்திய ஸ்மாட் மின்குமிழ்




சம்சுங் நிறுவனமானது புத்தம் புதிய LED ஸ்மார்ட் மின்குமிழ்களை வடிவமைத்து அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.


இதன்படி எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வரை ஜேர்மனியின் பிராங்புரூட்டில் இடம் பெறவுள்ள Light+ Building 2014 நிகழ்வில் இதனை அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இவை Bluetooth மற்றும் WiFi தொழில்நுட்பத்தினைக் கொண்டதாக காணப்படுவதுடன் 15 ஆயிரம் மணித்தியாலங்கள் அல்லது 10 வருட உத்தரவாதம் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

**பூனை எலி பிடிக்க பழக்குவதற்கு உபகரணம் தயார்!**



# விண்டோஸ் 8 இற்கு VLC Media Player




விண்டோஸ் 8 இயங்குதளத்திற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட VLC Media Player அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கவர்ச்சிகரமானதும், இலகுவானதுமான மெட்ரோ பயனர் இடைமுகத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த அப்ளிக்கேஷன் பீட்டா பதிப்பாகவே வெளியாகியுள்ளது.

இதில் Ogg, FLAC மற்றும் MKV போன்ற மேலும் பல வீடியோ கோப்பு வகைகளை செயற்படுத்தக்கூடியவாறு காணப்படுகின்றது.

மேலும் விண்டோஸ் ஸ்டோரிலிருந்து டெக்ஸ்டொப் பதிப்பு அப்ளிக்கேஷனை தற்பொழுது இணையத்தில் இலவசமாக தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

# Oculus நிறுவனத்தை Facebook வாங்குகிறது




வாட்ஸ் ஆப்பை தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள ஆக்குலஸ் நிறுவனத்தை வாங்க பேஸ்புக் திட்டமிட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் ஜாம்பவனாக திகழும் பேஸ்புக், சமீபகாலமாக நவீன தொழில்நுட்ப நிறுவனங்களை கையகப்படுத்தி வருகிறது.


சமீபத்தில் தான் கடந்த பெபரவரி 19ஆம் திகதி வாட்ஸ் ஆப் நிறுவனத்தை வாங்கியது. இந்த வர்த்தக பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட ஒரு மாதத்தில் ஆக்குலஸ்(Oculus) நிறுவனத்தையும் வாங்க திட்டமிட்டுள்ளது.

வீடியோகேமிற்கான விர்ச்சுவல் ரியாலிட்டி ஹெட்செட்(Virtual Reality Headset) தொழில்நுட்ப பணிகளை நிறைவேற்றி வருகிறது, இந்த நிறுவனம் அமெரிக்காவில் இருக்கிறது.

இந்நிறுவனத்தை ரூ.12 ஆயிரம் கோடிக்கு வாங்குவதாக பேஸ்புக் அறிவித்துள்ளது. இதில் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பங்குகளாகவும் வழங்கப்படும் என்றும் பேஸ்புக் குறிப்பிட்டுள்ளது.

இதுபோன்ற நவீன தொழில்நுட்ப சேவைகளை வாங்கி அவற்றை ஒருங்கிணைத்து செயற்படுத்தினால், வரும் காலங்களில் சமூக இணையதளத்தின் மூலம் மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யமுடியும் என்று பேஸ்புக் நிறுவுநரும் தலைமை செயல் அதிகாரியுமான மார்க் தெரிவித்துள்ளார்.

# கூகுள் கைபேசிக்கு புதிய இயங்குதளம்




Jolla நிறுவனமானது Google Nexus 4 ஸ்மார்ட் கைபேசிகளுக்கான புத்தம் புதிய இயங்குதளம் ஒன்றினை வடிவமைத்துள்ளது.

இது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவித்தலை அந்நிறுவனம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் விடுத்திருந்தது.

Sailfish OS எனப்படும் இப்புதிய இயங்குதளமானது கவர்ச்சிகரமான ஐகன்களை கொண்டுள்ளதுடன், மேலும் பல புதிய அம்சங்களை உள்ளடக்கியதாக வடி வமைக்கப்பட்டுள்ளது. இவ் இயங்குதளம் தொடர்பான மேலதிக தகவல்கள எதிர்வரும் வாரங்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# டுவிட்டருக்கு தடை நீக்கம்




சில வாரங்களுக்கு முன்னர் துருக்கியில் பிரபல சமூக வலைத் தளங்களுள் ஒன்றான டுவிட்டருக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதனை துருக்கியின் பிரதமரும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார். எனினும் தற்போது துருக்கி உயர் நீதிமன்ற உத்தரவின்படி இத் தளத்திற்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யூடியூப் தளத்திற்கான தடை தொடர்ந்து நீடிப்பதுடன், டுவிட்டர் தளத்திற்கான தடை தளர்த்தப்பட்டுள்ளதால் யூ டியூப் தளத்திற்கான தடையையும் நீக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....அம்மாதிரி வெட்டிவிட்டுச் சென்ற மரத்திலிருந்த சாம்பிராணிப் பிசின்களைக் கத்தியால் சுரண்டி எடுத்துக் காட்டினார். காட்டுவாசிகள் இதனைச் சேமித்து விற்பனை செய்வார்களாம். கலப்படமில்லாத அசல் காட்டு சாம்பிராணி.

இந்த ரிஷி வனத்தின் இன்னொரு அபூர்வம், இங்கு வெள்ளைப் புனல் முருங்கை கொடிகள் ஏராளமாக இருப்பதுதான்.

வயதான மல்லிகை கொடி தடிமான நிலையில் வெடிப்புகள் விட்டு வளைந்து நெளிந்து காணப்படுவது போலவே காணப்பட்ட அந்தக் கொடிகளில் ஒன்றில் ஒரு துண்டு வெட்டி கையில் பிடித்தார் நாகராஜன்.

என்ன ஆச்சரியம்! கையில் பிடித்திருந்த மரத் துண்டிலிருந்து வெண்மையான சுத்தமான நீர் நீரூற்றிலிருந்து கொட்டுவதுபோல வேகமாகக் கொட்ட ஆரம்பித்தது. ஆளுக்கு ஒரு ஙக வாங்கிக் குடித்தோம். ஆஹா என்ன சுவை! சுத்திகரிக்கப்பட்ட சுவையான குடிநீர்.

இவ்வனத்தில் தவம் செய்யும் ரிஷிகளும் சித்தர்களும் இதிலிருந்துதான் நீரைப் பருகுவார்களாம். அதிசயமான கொடிதான் இது. இதனை நீர்ப்பூசணிக் காய்க் கொடி என்ற பெயரால் பளிஞர்கள் அழைக்கின்றனர்.

### நவகன்னி சுனை

இயற்கையை ரசித்துக் கொண்டே வந்ததில் எப்படித் திரும்பினோம் என்பதே தெரியவில்லை. சட்டென்று காட்டை விட்டு வெளியே வந்தது போல சூரிய ஒளி எட்டிப் பார்த்தது. இப்போது மேட்டிலிருந்து படுவேகமாகப் பள்ளத்தில் இறங்குகிறோம். மீண்டும் மேடு ஏற்றம். இடையிடையே குறுக்காகச் செல்லும் மரத்தின் வேர்கள்தான் எங்களின் கால்களுக்குப் பிடிப்பு.



கோரக்கர் குகை

மெதுவாகக் காலை ஊன்றிக்கொண்டு மண் தரையில் இறங்கி ஏறுகிறோம். பள்ளங்களில் சரசரவென மரத்தின் வேர் கிளைகளைப் பிடித்தவாறே மெதுவாக கீழே இறங்குவதும் (சற்று வேகமாக இறங்க ஆரம்பித்தால் உருட்டி விட்டுவிடும் அபாயம்) கைகளில் எந்தப்பிடிமானமும் இல்லாமல் கால்களில் தட்டுப்படும் வேர் கிளைகளில் காலை ஊன்றி மேலே ஏறுவதும் வித்தியாசமான அனுபவம்தான். தத்தி தத்தி நடப்பது என்பார்களே, நாங்கள் அப்படி நடந்து கொண்டிருந்தோம்.

இப்போது மலையை ஒட்டிய இறக்கத்தில் ஒற்றையடி மலைப்பாதை. பாதையை அடுத்து மிகப்பெரிய பள்ளத்தாக்கு. அந்தப் பள்ளத்தாக்கை அடுத்து எதிரே மற்றொரு பெரிய மலை காணப்பட்டது.

அதுதான் பெருமாள் மலை என்று சுட்டிக் காட்டினார் நாகராஜ். அந்த மலையில் ஏதேனும் விசேடம் இருக்கிறதா?

ஆமாம், அங்கு நவகன்னி சுனை

**ஆன்மீகம் 89**

இருக்கிறது என்றவர், நாம அங்கே போகணும்னா ராத்திரி தங்கற மாதிரி ஏற்பாட்டோட வரணும். நவகன்னி சுனைக்குப் பக்கத்திலே தங்குவதற்கு ஒரு குகை இருக்கு. அங்கு தங்கிவிட்டு மறுநாள் காலையில் பெருமாள் மலைக்குச் செல்லலாம். பெருமாள் மலையிலே காட்டு வல்லாரை அதிக அளவில் விளைந்து கிடக்கும் என்றவரை இடைமறித்து, அது என்ன நவகன்னி சுனை அங்கு ஒன்பது சுனைகள் இருக்குமோ? என்றேன் நவகன்னி என்ற பெயர்க்காரணத்தை அறிந்து கொள்ளும் ஆவலுடன்.

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அங்கு ஒரே ஒரு சுனைதான் உண்டு. அங்கு காலாங்கி நாதரால் தவசி குகைக்கு மேலே சிறை வைக்கப்பட்ட நவக்கிரகங்களையும் அவர்களின் மனைவியர் இங்கு வந்து தவம் செய்து மகாலிங்கரின் கருணையால் மீட்டுச் சென்றனர்.

அந்த நவக்கிரகங்களின் மனைவியர் கன்னிகளாக மாறி இங்கு நீராடி தவம் செய்தமையால் அவர்கள் நீராடிய சுனைக்கு நவகன்னி சுனை என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர்.

*(தொடரும்)*

டாக்டர். சி. எஸ். முருகேசன். எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**08**

இவர்தான் சுரதா என்று பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையில் அவரை எனக்கு அடையாளம் காட்டினார்கள்.

அலட்சியமாய் என்னைப் பார்த்தார்.

அப்படியே நானும் அவரைப் பார்த்தேன்.

சுரதா என்ற பெயருக்குத் தமிழ்க் கவிதைகளின் மணி மண்டபத்தில் ஒரு தங்க நாற்காலி உண்டெனினும் அவருடைய கவிதைகளுள் எதுவும் என்னுள் கிளர்ச்சித் தீக்குச்சிகளைக் கிழித்துப் போட்டதில்லை.

அவருடைய சில கவிதைகள் என்னைப் பார்த்து கண்ணடித்திருக்கின்றன;

சில கவிதைகள் என்மீது பூ எறிந்து விட்டுப் போயிருக்கின்றன;

சில கவிதைகள் சட்டைக் காலரைப் பிடித்துச் சட்டென்று இழுத்திருக்கின்றன.

அந்த அளவோடு சரி.

ஆனால் அந்த மனிதரோ பழகப் பழக, கவியரங்குகளுக்காகப் பல நூறு மைல்கள் அவரோடு பயணம் போகப் போக, அவரோடு மூடிக் கிடந்த சிந்தனைகள் என்னோடு மொட்டவிழ- மொட்டவிழ அந்தக் கவிஞர் என்னுள் விஸ்வரூபம் எடுத்து விரிய ஆரம்பித்தார்.

அவர் கவிஞர் மட்டுமில்லை; நல்ல கல்வியாளர் என்பதும், அவர் ஓடையின் கரைகளுக்குள் ஓடிக் கொண்டிருக்கிற சமுத்திரம் என்பதும், உலகத்தைப் படித்துக் கொண்ட அளவுக்கு உலகியலைப் படித்துக் கொள்ளாதவர் என்பதும், கவிஞனுக்குரிய அத்தனை அலட்சியங்களையும் கொண்ட லட்சியவாதி என்பதும் போகப்போக எனக்குப் புரிய ஆரம்பித்தன.

காலப் போக்கில் சுரதாவோடு பேசுவதும், சுரதாவைப் பற்றிப் பேசுவதும் சுகானுபவங்களாய் ஆகிவிட்டன.

அவரோடு உட்கார்ந்து பேசினால் நேரம் போவது தெரியாது.

ஓடிக்கொண்டே பேசினால் தூரம் போவது தெரியாது.

அவரோடு பேசிவிட்டு வந்தால், ஒரு நூலகத்துக்குள் நுழைந்து வந்த மாதிரி இருக்கும்.

ஆச்சரியமான செய்திகளை அணி வகுத்து நிறுத்துவார்.



## சுரதா

எல்லோரும் பத்துமாதம் இல்லை; மாவீரன் நெப்போலியன் தன் தாயின் வயிற்றில் பதினொரு மாதங்கள் இருந்தவன் என்பார்.

மூக்கின் மேல் மச்சம் கொண்டவர் அக்பர் என்பார்.

கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு, உற்சாகக் கிளை[illegible] பெரியாரை [illegible] யார் தனக்குச் சிலை வைப்பதை ஒப்புக் கொண்டார். ஆனால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். சிலை வைப்பது கூட ஒரு மூட நம்பிக்கை அல்லவா? என்று முரசறைவார்.

ஒரு நல்ல செய்தியைச் சொல்லிவிட்டு நாம் அதை வியந்து நிற்பதற்கு- போதுமான இடைவெளி விடுவார்.

காணாமற் போனவர்கள் பெயர்கள் எல்லாம் வாக்காளர் பட்டியலில் இருப்பது மாதிரி, இலக்கிய வரலாற்றில் இல்லாமல் போனவர்கள் பெயர்கள் எல்லாம் இவரது பேரேட்டில் இருக்கும்.

பொடிப்பொடி விடயங்களிலெல்லாம் பிடிவாதமாய் இருக்கிற சுரதா, பொடி விடயத்திலும் பிடிவாதமாய் இருக்கிறார்.

அவரிடம் என்னால் தாங்க முடியாதது அந்தப் பொடியின் நெடிதான்.

ஆனால் அவரது தமிழுக்காகவே அதை நான் சகித்துக் கொள்ளச் சம்மதித்தேன்.

இப்படி ஒரு முடிவெடுத்தேன்.

சுரதாவோடு பேசும்போது காதுகளைத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும்; மூக்கை மூடிக் கொள்ள வேண்டும்.

சுரதாவிடம் நான் நேசிப்பது அவரது சுதந்திரம்.

கட்டற்ற காற்றாய், முட்களில் சிக்காத மேகமாய், கயிறறுத்த கன்றாய் அவர் போக்கில் அவர் போய்க் கொண்டேயிருப்பார்.

உயர்வு-தாழ்வு; செல்வம்- வறுமை; வசதி-அசதி; கண்ட்டஸா-கட்டை வண்டி இவைகளையெல்லாம் கடந்த ஒரு கவலையில்லாத மனிதனாய் அவரை நான் காண்கிறேன்.

அரசு சபைகளில் விருது பெறுவதும், அடுத்த நாள் தெருவோர டீக்கடைகளில் தேநீர் பருகுவதும் ஒன்றென்று கருதும் குன்றென்று சொல்வேன் அந்தக் குணக் கவிஞனை.

[illegible]களின் உற்சவம் அவர்.

[illegible]த கல்வியும், அலுக்காத அனுபவங்களும் அவர் இதயத்தில் நிறைந்து நுனி நாக்கில் வழிந்து, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சிந்தப் பார்க்கின்றன.



பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளைப் பாட வருகிறபோது,

தடைநடையே அவர் எழுத்தில் இல்லை; வாழைத் தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு? என்று கேட்டதும்-

குழந்தையை, குழிக்கிழங்கு என்று வருணித்ததும்-

படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை கொண்ட பாண்டியர்கள் என்று அவர் படம் பிடித்ததும் என்னை ஒன்றும் அவ்வளவு பெரிதாய் அசத்தவில்லை. அவர் உரையாடும் போது சொல்லும் உவமைகளே என்னை உறங்கவிடாமல் செய்தவை.

ஒரு நல்ல நண்பர்-நயமான கவிஞர் என்னிடம் சொல்லியிருந்தார். என் கவிதைக்குக் குருநாதர் சுரதா; என் பேச்சுக்குக் குருநாதர் கலைஞர்.

ஒருமுறை சுரதாவைச் சந்தித்தபோது அந்தக் கவிஞர் உங்கள் மீது அடங்காத அன்பு வைத்திருக்கிறார்.

-வைரமுத்து-

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

774



## சிறந்த பக்தி!

"நாம் நம் வீட்டைத் தவிர வேறு எங்கும் சாப்பிடக்கூடாது என்று தெரியாதா உனக்கு?" என்று கூச்சலிட்டான்.

"அண்ணா? காலையிலிருந்து சாப்பிடாததால் எனக்கு பயங்கரப் பசியாயிருந்தது. அதனால் அங்கே சாப்பிட்டுவிட்டேன்.

தவிர சூரிய ஒளி, காற்று, தண்ணீர் ஆகியவை வகுப்பு வேறுபாடு பார்க்கின்றனவா? நமது உயிர் காத்து உடல் வளர்க்கும் உணவும் அதுபோல்தான்! அதை யார் அளித்தாலும் உண்ணலாம்! தவறில்லை!" என்று கண்ணன் கூறவும், ராமநாதனின் கோபத்தீயில் எண்ணெய் விட்டது போல் ஆயிற்று.

"நீ ஒரு மகாபாவி! இன்று முதல் நீ எனக்குத் தம்பியில்லை! போ, வீட்டை விட்டு!" என்று ராமநாதன் காட்டுக்கத்தலாகக் கத்த, கண்ணன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு அண்ணன வீட்டை விட்டு வெளியேறினான்.

அண்ணனின் வீட்டிற்கு அருகிலேயே மற்றொரு வீட்டைக் கட்டிக் கொண்டு கண்ணன் வசித்து வரத் தொடங்கினான்.

ஆனால் அவன் தன் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவில்லை. சாதி, மத பேதம் பார்க்காமல் வீடு தேடி வருபவர்கள் அனைவருக்கும் உணவு அளித்தான்.

திடீரென, தர்மபுரியில் மழை பெய்யத் தொடங்க, தொடர்ந்து பல நாடகள் மழை நீடித்தது. பல ஏழைகளின் குடிசைகள் சேதமாகின.

வீட்டை இழந்த ஏழைகள் அனைவரும் கண்ணன் வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். மழை தொடர்ந்து பெய்து கொண்டிருக்கையில், திடீரென ராமநாதன் வீடு முழுவதும் இடிந்து விழுந்தது.

ராமநாதனும், அவன் மனைவியும் பூஜை செய்து கொண்டு இருந்த அறை மட்டும் தப்பியது. ஆனால், கண்ணன் வீட்டிற்கு எந்த சேதமும் உண்டாகவிலலை.

அதைக்கண்டு கோபமுற்ற ராமநாதன் தான் வழிபடும் தேவியிடம், "தேவி! உனக்கு தினமும் மணிக்கணக்காக பூஜை செய்கிறேன். அப்படிப்பட்ட என் வீட்டை இடித்துவிட்டாய்! ஆனால், ஒரு போதும் பூஜை செய்யாதவனான கண்ணனின் வீடு சேதமடையவில்லை. இது ஏன்?" என்று முறையிட்டான்.

உடனே, அவன் பூஜை செய்யும் தேவி பேசத் தொடங்கினாள். "நீ என்னுடைய பக்தன் தான்! ஆனால் ஆசார, அனுஷ்டானங்கள் என்ற பெயரில் ஏழை மக்களை ஒதுக்கி வைத்தாய்! உன் தம்பி என்னை பூஜை செய்வதில்லையே தவிர, என்னை மனதால் வழிபடுகிறான்.

நீ என்னை இந்த விக்கிரகத்தில் மட்டும் காண்கிறாய். அவனோ ஒவ்வொரு உயிரிலும் காண்கிறான்.

தவிர, அவன் வீட்டில் இப்போது நூற்றுக்கணக்கான ஏழைகள் தங்கி உள்ளனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டி, அந்த வீட்டை இடியாமல் காப்பாற்றினேன். உன வீடு இடிந்ததே தவிர, உன்னையும், உன் மனைவியையும் காப்பாற்றி இருக்கிறேன்" என்றாள்.

தேவியின் சொற்களைக் கேட்ட ராமநாதனின் மனம் மாறியது. "தேவி! இன்று நான் உண்மையை உணர்ந்தேன்.

இனி, என் தம்பியைப் போல் நானும் சேவை செய்வேன்!" என்று கூறி தேவியை வணங்கினான். (முற்றும்)



## 04.2014 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1079 - போலந்து மன்னன் இரண்டாம் பொலேஸ்லாவ் என்பவனின் கட்டளைக்கிணங்க கிராக்கோவ் ஆயர் ஸ்டானிஸ்லாஸ் தூக்கிலிடப்பட்டார்.
- 1831 - உருகுவேயில் சல்சிபுதிஸ் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான சருவா இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர்.
- **1865 - ஆப்ரகாமலிங்கன் தனது கடைசிப் பேச்சை நிகழ்த்தினார்.**
- 1899 - ஸ்பெயின் புவேர்ட்டோ ரிக்கோவை ஐக்கிய அமெரிக்காவுக்கு அளித்தது.
- 1905 - ஐன்ஸ்டீன் தனது சார்புக் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 1921 - விளையாட்டு வர்ணனை முதன்முறையாக வானொலியில் ஒலிபரப்பானது.
- 1957 - பிரித்தானியா சிங்கப்பூரின் சுயாட்சிக்கு ஒத்துக் கொண்டது.
- 1970 - அப்போலோ 13 ஏவப்பட்டது.
- 1979 - தான்சானியப் படைகள் உகண்டாவின் தலைநகரான கம்பாலாவை ஆக்கிரமித்தன. இடி அமீன் தப்பி ஓட்டம். .
- 1987 - இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் லண்டனில் கைச்சாத்தானது.
- 2002 - வெனிசுவேலாவில் ஜனாதிபதி ஹியூகோ சாவெஸ் இற்கெதிராக இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 2012 - இந்தோனேசியாவில் சுமாத்ரா கடற்பகுதியில் 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டது.

### பிறப்புகள்


- 1869 - கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (இ. 1944)

### இறப்புகள்

- [illegible] ஞர் (பி. 1841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆப்ரகாம் லிங்கன்



1809 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆப்ரகாம்லிங்கன். அவரது தந்தை தாமஸ் லிங்கன். குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல் போன்ற அரிய குணங்கள் சிறு வயதிலேயே லிங்கனிடம் இருந்தது. எப்போதும் கலகலப்பாகப் பழகுதல் கதை சொல்லுதல் வேடிக்கையாகப் பேசுதல் ஆகிய லிங்கனின் குணாங்கள் அவர் மீது மற்றவர்களை விருப்பம் கொள்ளச் செய்தன.

தனது இருபத்து மூன்றாவது வயதில் முதன் முதல் ஆப்ரகாம்லிங்கன் பிளாக் காக் போரில் ( black hawk war ) கலந்து தலைவனாக பணியாற்றியது புதியதோர் பாதையை காட்டியது.

ஆபிரகாம்லிங்கன் ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவராவார். அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர்.

1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க, தென் மாநிலப் பிரிவினைக் கருத்தாளர்களை எதிர் கொண்டு உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர்.

1847 - 1849 ஆண்டுகளில் அமெரிக்க பாராளுமன்ற உறுப் பினராக பணிபுரிந்தார். 1860 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1865 இவர் வோஷிங்டன் டி.சி யில் உள்ள ஃவோர்டு அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் கொல்லப்பட்டார். அமெரிக்க ஒன்றியத்தின் ஒற்றுமைக்காக உயிர் துறந்து புகழ் எய்தினார்.

# "ஜய" வருட ராசிபலன்கள்

## நினைத்தது நிறைவேறும் வருடம்!



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

**நினைத்தது நிறைவேறும் வருடம்!**

**இனிமையாகப் பேசி மற்றவர்களை உங்களது ரசிகர்களாக மாற்றும் இடப இராசிநேயர்களே!**

விஜய ஆண்டு முடிந்து ஜய ஆண்டு பிறந்துவிட்டது. இந்தப் புத்தாண்டு பிறக்கும் பொழுதே உங்கள் இராசிநாதன் குருவால் பார்க்கப்படுகிறார். திடீர் மாற்றங்களை தித்திப்பாக மாற்றிக் கொடுப்பது குரு சுக்ர சந்திப்புதான். ஆறிலே ராகு சஞ்சரித்து ஜோரான வாழ்க்கைக்கு அஸ்திவாரமிட்டுக் கொடுக்கப் போகிறது.

**புதிய திருப்பம் தரும் புத்தாண்டு!**

உழைப்பிற்கென்று பெயர்பெற்ற காளை உங்கள் இராசிச் சின்னமாகும். இந்தப் புத்தாண்டில் புதிய திருப்பங்களை காணப் போகிறீர்கள். பொருளாதாரநிலை உயரும்.

நட்பிற்கு முக்கியத்துவம் தரும் நல்லவர் நீங்கள். பேச்சுத் திறமையால் சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர்கள்.

இராசிநாதனாக சுக்ரன் அமைவதால் சகல சுக போகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும்.

புதனும், சுக்ரனும் உங்கள் சுய ஜாதகத்தில் பொருத்தமான இடத்தில் இருந்தால்தான் வாழ்க்கைத் துணையால் வளர்ச்சியும் வந்து சேரும். மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

**பலன் தரும் யோகங்கள்**

இப்படிப்பட்ட அமைப்புகளைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு யோகம் செய்யும் சனியின் வக்ர இயக்கத்தோடும் சப்தம விரயாதிபதியான செவ்வாயின் வக்ரத்தோடும் பிறக்கிறது. குரு, தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். இரண்டிலே குரு சஞ்சரிக்கும் பொழுது திரண்ட செல்வம் வந்து சேரும் என்பார்கள்.

பொதுவாக எத்தனை கிரகங்கள் சிறப்பான நிலையில் சஞ்சரித்தாலும், இராசிநாதன் பலம்பெற்று சஞ்சரித்தால்தான் பலன் கிடைக்கும். இல்லையேல் வாய்ப்பு வந்தாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள இயலாது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதன் சுக்ரன் 10 ஆம் இடத்தில் பரிவர்த்தனை பெற்றுச் சஞ்சரிக்கிறார்.

பரிவர்த்தனை யோகம் என்பது மிகச் சிறப்பான யோகமாகும். குறிப்பாக யோககாரகன் சனி வீட்டில் சுக்ரனும், சுக்ரன் வீட்டில் சனியுமாக சஞ்சரிக்கிறார்கள். இதன் விளைவாக ஜீவன ஸ்தானமும் பலம் பெறுகிறது. எனவே, எண்ணங்கள் எளிதில் செயலாகும். இலாபத்தைக் குவிக்கச் செய்யும் தொழிலோடு கிளைத் தொழில் செய்ய வாய்ப்புக்கள் கைகூடி வரும்.

தொடர்ந்து பதவி உயர்வு, உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் கிடைக்கும்.

ஒரு சிலர் விருப்ப ஓய்வு பெற்று தனித்து இயங்கலாமா என்று சிந்திப்பர். ஆனால் திசாபுத்தி பலம் பெற்றிருந்தால் மட்டுமே விருப்ப ஓய்வு பெற்று தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

**பூர்வீக சொத்து வரும்!**

இராசிநாதன் சந்திரனோடு செவ்வாய் இணைந்து சந்திர மங்கள யோகத்தை உருவாக்குகிறார். உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் இந்தக் கிரக சேர்க்கை இருப்பதால் பிள்ளைகள் வழியில் இருந்த சுபகாரியப் பேச்சுக்களில் இருந்த தடை அகலும். பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழாக்கள், புனிதப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு போன்றவைகள் உருவாகும்.

பூர்வீக சொத்துக்களை வாங்கி புதிய வடிவமைப்பில் சிலர் வீடுகட்ட தொடங்குவர். பொருளாதார நிலை உயரும் இந்த நேரத்தில் இடம், பூமி சேர்க்கைகளும் நூதனப் பொருள் வாங்கும் அமைப்புகளும் அதிகரிக்கும். சுய பலத்தால் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அதிக பொறுப்புகளும் அதிசயமான மாற்றங்களும் வந்து சேரலாம்.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி 21.06. 2014 அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். வருடக் கடைசி வரை அங்கேயே இருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 5 இல் ராகுவும், 11 இல் கேதுவும் சஞ்சரிக்கும் இந்த நேரம் உன்னதமான நேர்மாகும். பிள்ளைகள் வழியில் இருந்த கல்வித் தடை அகலும். பிரச்சினைகளை சமாளிக்கின்ற ஆற்றல் உங்களுக்குப் பிறக்கும்.

## இடபம்



இதுவரை சனியின் பிடியில் சிக்கியிருந்த ராகு இப்போது தனித்து பின்னோக்கி வந்து உங்கள் எண்ணங்களை எல்லாம் ஈடேற்றி வைக்கப் போகிறது. பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். தொழில் வளம் சீராக இருக்கும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

இலாப ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது உதிரிவருமானங்கள் பெருகும். அமைதியான சூழ்நிலை நிலவி தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். விவேகத்தோடு செயற்பட்டு விவகாரங்களை தீர்த்துக் கொள்வீர்கள்.

இதுபோன்ற நேரங்களில் ராகு- கேதுக்களுக்கு பரிகாரம் செய்வதன் மூலமும், யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்குரிய அனுகூல ஸ்தலங்களில் சர்ப்ப சாந்தி செய்து கொள்வதன் மூலமும் மன நிம்மதியையும், மகிழ்ச்சியையும் வரவழைத்துக் கொள்ளலாம்.

**சப்தம ஸ்தானத்தில் சனிபகவான்!**

ஜய வருடம் மார்கழி மாத தொடக்க நாள் முதல் சனி பகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். கண்டகச் சனி என்று இதை வர்ணிப்பார்கள். இருந்தாலும் நீங்கள் பயப்படத் தேவையில்லை. உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகமாவார். எனவே, சுப விரயங்களையே வழங்கி துணிவையும் தன்னம்பிக்கையையும் கூட்டுவார்.

கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் அகலும். கொள்கைப் பிடிப்பை ஒரு சில சமயங்களில் தளர்த்திக் கொள்ள நேரிடும். இடமாற்றம், இலாகா மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும். கடன் சுமை குறைந்தாலும் புதிய கடன்களும் தலை தூக்கும். சனியின் வக்ர காலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் இருப்பதே நல்லது.

மாசி 30 முதல் வருடக் கடைசி வரை வக்ர இயக்கத்திலேயே சனி பகவான் இருக்கிறார். இக்காலத்தில் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயங்களை அதிகம் பெற முடியும். தொழிலில் ஏமாற்றங்களை சிலர் சந்திக்க நேரிடலாம். பாசத்தோடு பழகியவர்களின் வேஷம் கலையும். பகை பாராட்டாமல் எல்லோரையும் அனுசரித்துச் சென்றால் பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்கும்.

**வழிபாட்டின் மூலம் நன்மை**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாய் சனி சேர்க்கை ஏற்படுகிறது. இக்காலத்தில் தொழிலில் திடீர் விரயங்கள் உருவாகலாம். தொல்லை தரும் எதிரிகளின் பலம் கூடும். இல்லத்தில் இனம்புரியாத கவலை மேலோங்கும். அங்காரக சனி வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.

**இடப இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

மங்கல ஓசை மனையில் நடைபெறும்!

ஜய வருடத் தொடக்கம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகளை மேலோங்க வைக்கும். குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் குடும்பத்தில் சுப காரியங்கள் கைகூடும். சென்ற ஆண்டு கண்ட கனவுகள் இந்த ஆண்டு நனவாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தாய் வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். உங்கள் பெயரிலேயே தொழில் செய்ய முடிவெடுப்பர்.

இராகு – கேதுவின் பெயர்ச்சியின் விளைவாக மேலும் நற்பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். குழந்தைகளின் பெயரில் வங்கிகளில் வைப்பு நிதி சேர்க்குமளவிற்கு பணப்புழக்கம் நன்றாக இருக்கும். சனிப் பெயர்ச்சிக்குப் பின்பு உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். பிரச்சினைகள் தீர பிரதோஷ வழிபாடும், சர்ப்ப சாந்தியும் செய்து வருவது நல்லது.

**குருப்பெயர்ச்சி பலன்கள்**

சகாய ஸ்தானம் எனப்படும் மூன்றாமிடத்தில் வைகாசி 30 ஆம் திகதி (13.06. 2014) அன்று குரு சஞ்சரிக்கப் போகின்றார். குரு சஞ்சரிக்கும் இந்த கடக இராசி குருவிற்கு உச்ச வீடாக அமைகின்றது. எனவே, உச்சம் பெற்ற குரு பார்க்கும் இடங்களான 7,9,11 ஆகிய மூன்று இடங்களும் புனிதமடைகின்றன.

இராசிநாதன் சுக்ரனுக்கு குரு பகைவனாக இருந்தாலும்கூட குருவின் பார்வைக்கு பலன் உண்டு அல்லவா? அதிலும் உச்சம் பெற்ற குரு பார்ப்பதால் உன்னதமான பலனை வழங்க வேண்டும் அல்லவா? கார்த்திகை மாதத்தில் குரு அதிசாரம் பெற்று சிம்மத்திற்கு செல்கிறார். பிறகு



மார்கழி மாதம் வக்ரமாகி மீண்டும் கடகத்திற்கே வருகிறார். வருடக் கடைசி வரை வக்ர இயக்கத்திலேயே குரு சஞ்சரிக்கின்றார்.

**ஏழினைக் குருதான் பார்த்தால்,**
**இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்!**
**ஒன்பதைக் குருதான் பார்த்தால்,**
**ஒளிமயமான வாழ்வு சேரும்!**
**இலாபத்தைக் குருதான் பார்த்தால்,**
**நல்லதோர் செல்வம் கூடும்!**

என்பது ஜோதிட நியதி.

எனவே, களத்திர ஸ்தானம் குருவின் பார்வையால் புனிதமடைகின்றது. மங்கள ஓசை இல்லத்தில் கேட்கும். தங்கு தடைகள் அகலும். கனவுகள் நனவாகும். 9,11 ஆகிய இடங்களை பார்ப்பதால் பொருளாதார நிலை உயரும். புதிய வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். குருவின் வக்ர காலத்தில் கூடுதல் கவனம் செலுத்தினால் வாடுதல் மாறி வசந்தம் உருவாகும்.

**சிறப்பு வழிபாடுகள்!**

**பொதுவாக இராசிநாதன் சுக்ரனுக்குரிய வழிபாடாக வெள்ளிக்கிழமை தோறும் சாந்த ரூப அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். யோக பலம் பெற்ற நாளில், நந்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்வதோடு பிரதோஷ விரதமிருந்து நந்தியை வழிபட்டால் நலம் கிடைக்கும்.**

நாளை மிதுனம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பேராசையில் விழுந்த மண்!

...இந்த ஒட்டுண்ணி ஏகபோக முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு புதிய ஆளும் வர்க்கமாகினர். அதேசமயம், இவர்கள் ஒற்றைக் குழுவாக ஒரே தலைமையின் கீழ் உருத்திரண்டு விடவில்லை. இவர்கள் வெவ்வேறு கும்பலகளாக அமைந்து அதிகாரத்தை ஏகபோகமாகக் கைப்பற்றிக் கொள்வதற்கான, வேட்டையில் கிடைத்த இரையைப் பங்கு போட்டுக்கொள்வதற்கான தீராத நாய்ச் சண்டைகளில் ஈடுபடுகின்றனர்.

சோவியத் ஒன்றியத்திலிருந்து தனியே பிரிந்து போன, கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலான உக்ரைன் வரலாற்றில் ஒட்டுண்ணி ஏகபோக முதலாளிகள் மற்றும் பாசிசக் குற்றக்கும்பல்கள் (fascist oligarchies) அடங்கிய ஆளும் வர்க்கத்தினரிடையே சட்டபூர்வமாகவும் நாடாளுமன்ற முறைகளிலும் சட்டவிரோத முறைகளிலும் மோதல்களும் ஆட்சிக்கவிழ்ப்புகளும் நடந்தன. அந்தவாறான போக்கில் ஆட்சிக்கு வந்த உக்ரைனின் ரஷ்ய ஆதரவு ஜனாதிபதியான விக்டர் யனுகோவிச் தன நாடு ஐரோப்பிய யூனியனோடு நடத்தி வந்த பேச்சுவார்த்தையை கடந்த நவம்பரில் முறித்துக் கொண்டு, சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்தார். ஏனெனில், அது ஏகாதிபத்திய எடுபிடியான ஐ.எம்.எஃப்.-பின் சிக்கன சீரமைப்பு, கட்டண உயர்வு முதலிய நிபந்தனைகளை உள்ளடக்கியிருந்தது. இவற்றின் விளைவாக உள்நாட்டில் சமூகக்கொந்தளிப்பு ஏற்படும் என்று அரசு அஞ்சியது.

ஆனால், ரஷ்ய ஆதரவு உக்ரைன் ஜனாதிபதியான விக்டர்யனுகோவிச்கும்பலே உக்ரைன் மக்கள் வெறுக்கும் இலஞ்சம்-ஊழல் அதிகாரமுறைகேடுகளில் மூழ்கித் திளைக்கும் ஒட்டுண்ணி ஏகபோக முதலாளிகள் மற்றும் பாசிசக் குற்றக் கும்பல்கள் (fascist oligarches) அடங்கிய ஆளும் வர்க்கக் கும்பலில் ஒன்றுதான். இதனால், ஐரோப்பிய யூனியனுடனான ஒப்பந்த முறிவைக் காரணம் காட்டி விக்டர் யனுகோவிச் கும்பலின் அரசுக்கு எதிராக "யூரோ மைதானம்" என்ற இயக்கம் பெரிய அளவு வெடித்தது. வலதுசாரி பிற்போக்கு மற்றும் புதிய நாஜிகள் அதில் பெருமளவு பங்கேற்றுத் தலைமை தாங்கின. அமெரிக்கா மற்றும் பிற மேலை நாடுகளின் எடுபிடிகளான "அரசுசாரா தொண்டு நிறுவனங்கள்" அதை வழிநடத்தின. ஒட்டுண்ணி ஏகபோக முதலாளிகளுக்குச் சொந்தமான ஊடகங்கள் அவசியமான பிரசார பின்புலததைக் கொடுத்தன. இலஞ்சம்-ஊழல் அதிகாரமுறைகேடுகளால் சீரழிந்த ஆளும் கும்பலுக்கும் அரசுக்கும் எதிரான எழுச்சியாக அது சித்தரிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு உக்ரைனில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் முதலில் விக்டர் யனுகோவிச் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இது தேர்தல் மோசடி என்று எதிர்த்துப் போட்டியிட்ட யூஷெசன்கோ தலைமையிலான கும்பல் "ஆரஞ்ச் புரட்சி" என்ற "எழுச்சியை"க் கட்டவிழ்த்து விட்டது. "கலகங்களும், கொந்தளிப்புகளும்" வெடித்தன. உக்ரைன் உச்சநீதிமன்றம் தலையிட்டு, யூஷெசன்கோவை ஜனாதிபதியாக்கியது. பின்னர் அந்நாட்டுத் தேர்தல் கமிசன் நடத்திய விசாரணையில தேர்தல் மோசடி எதுவும் நடக்கவில்லையெனக் கூறி விக்டர் யனுகோவிச் ஜனாதிபதியானார். அந்த ஆரஞ்சு புரட்சியை நடத்திய "ஆரஞ்ச் குடும்பம்"தான் இந்த "யூரோ மைதானம்" இயக்கத்தின் முதுகெலும்பாகவுள்ளது. வலது தீவிரவாதிகளும் புதிய நாஜிகளும் தலைமையேற்கும் "யூரோ மைதானம்" இயக்கத்தினர் ஜனநாயகம் மற்றும் தேசியத் தீவிரவாத வெறியைக் கிளப்பி வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். இனவெறி பாசிச கும்பல் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாத வெறியாட்டங்களில் லெனின் சிலையும் பாசிச எதிர்ப்புச் சின்னங்களும் பொதுச்சொத்துக்களும் நாசமாக்கப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதோடு, பலர் படுகாயமடைந்தனர்.



தேசியவெறி இனவெறியூட்டி லெனின் சிலையையும் பாசிச எதிர்ப்புச் சின்னங்களையும் உடைத்து நாசமாக்கிய புதிய நாஜிகளின் பயங்கரவாத வெறியாட்டம்.

இந்நிலையில், கடந்த பெப்ரவரி 21 அன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மேற்பார்வையில, யனுகோவிச் அரசுக்கும் மேற்கததிய ஏகாதிபத்திய விசுவாசிகளான போராட்டக்காரர்களுக்குமிடையே ஒரு சமரச ஒப்பந்தம் போடப்பட்ட போதிலும், பெப்ரவரி 22 ஆம் திகதியன்றே ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, எதிர்த்தரப்பான பாசிசக் கும்பல்கள் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் ஆதரவுடன் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தின. அதிபர் விக்டர் யனுகோவிச் நாட்டைவிட்டுத் தப்பியோடியதும், பெருமுதலாளிகள், ஊழல் பெருச்சாளிகள், நவீன நாஜிகள் உள்ளிட்ட பல்வேறு கும்பல்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

ரஷ்ய வல்லரசின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது எண்ணெய் மற்றும் எரிவாயு வளம். ரஷ்யாவிலிருந்து இறக்குமதியாகும் எரிவாயுவையே மேற்கு ஐரோப்பிய நாடுகள் பெரிதும் சார்ந்துள்ளன. ரஷ்யாவிலிருந்து அதிக அழுத்தம் கொண்ட குழாய்களின் மூலம் மேற்கு மற்றும் தெற்கு ஐரோப்பாவுக்குச் செல்லும் ஐந்து பெரும் எரிவாயுக் குழாய்கள் பெலாரஸ், உக்ரைன் முதலான முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் வழியாகவே செல்கின்றன. ரஷ்யாவின் எரிவாயு விநியோகத்தைக் கட்டுப்படுத்தவும், உக்ரைன் மீண்டும் ரஷ்யச் செல்வாக்கின் கீழ் போய்விடாமல் தடுக்கவும் உக்ரைனில் அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ படைகள் குவிக்கப்பட்டன.



கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி ஆட்சிக் கவிழ்ப்பைச் சாதித்த வெற்றியை நாஜிசக் கொடியுடன் கொண்டாடும் "ஈரோ மைதானம்" இயக்கத்தின் வலதுசாரி தீவிரவாதிகளும் புதிய நாஜிகளும்.

ரஷ்யாவோ உக்ரைனில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பையும் அமெரிக்க ஆதரவு பிற்போக்கு அரசு அமைக்கப்பட்டுள்ளதையும் எதிர்த்து, உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கே கருங்கடல் பகுதியில் தனது படைகளைக் குவித்து எச்சரித்தது. இதைத் தொடர்ந்து உக்ரைனின் தென்கிழக்கிலுள்ள சுயாட்சிப் பிரதேசமான கிரீமியாவில், ரஷ்யாவுடன் இணைவதற்கான தீர்மானத்தை கிரீமியாவின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியும் இதற்கான கருத்துக் கணிப்புத் தேர்தலை நடத்தியும், கிரீமியாவை ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டுள்ளது.

யூகோஸ்லாவியாவில் தேசிய உரிமையை ஆதரித்துப் போர் புரிந்த அமெரிக்கா, இப்போது கிரீமியா ரஷ்யாவுடன் இணைந்ததை எதிர்க்கின்றது. ரஷ்யாவை ஆக்கிரமிப்பாளனாகவும், போர்ப் பதற்றத்தைத் தோற்றுவித்து அமைதியையும் ஜனநாயகத்தையும் சீர்குலைப்பதாகவும் கூச்சலிடுகின்றது. மறுபுறம், ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்கா அச்சுறுத்துவதோடு, தொழில் வளர்ச்சியடைந்த பெரும் பணக்கார நாடுகளின் கூட்டமைப்பான ஜி-8 லிருந்து தற்காலிகமாக ரஷ்யாவை நீக்கிவிட்டது.



ஆட்சிக் கவிழ்ப்பிற்கு முன், டிசெம்பர் 2013 இல் ரஷ்யா தலைமையிலான சுங்க ஒன்றியத்தில் இணையும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யனுகோவிச்சுடன்- ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

ஆனால், ரஷ்யா மீது ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடை விதித்தால், அதற்குப் பதிலடியாக ரஷ்யா தனது எரிவாயுவை விலையேற்றம் செய்தாலோ அல்லது எரிவாயுவை விநியோகிக்க மறுத்தாலோ, அது ஐரோப்பிய கண்டத்தில் மிகப்பெரிய நெருக்கடியாக மாறிவிடும். மேலும் சீமென்ஸ் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான ஜேர்மன் நிறுவனங்கள் ரஷ்யாவில் பல்லாயிரம் கோடி டொலரில் முதலீடு செய்துள்ள நிலையில், ஜேர்மனி பெரும் பாதிப்புக்குள்ளாகும். இதனால் உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளான ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களும் அடுத்த அடியை எடுத்து வைக்க முடியாமல் திணறுகின்றன.

அன்று இந்த ஏகாதிபத்தியவாதிகள், கம்யூனிசத்தால்தான் பிரச்சினை, மேற்கத்திய பாணி ஜனநாயகம்தான் இதற்கு ஒரே தீர்வு என்றார்கள். சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்ததும் கம்யூனிசம் தோற்றுவிட்டது, முதலாளித்துவம் வெற்றியைச் சாதித்துவிட்டது என்றார்கள். இனி போர் அபாயமே இருக்காது, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதிலும் வளர்ச்சியைச் சாதிப்பதிலும் உலகம் தனது கவனத்தைச் செலுத்தும் என்றார்கள். ஆனால் நடப்பதென்ன? மேற்கத்தியபாணி முதலாளித்துவ ஜனநாயகத்தை நிறுவிய பின்னரும்கூட, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நெருக்கடிகளும்பிரச்சினைகளும்தொடர்கின்றன. வாய் கொள்ளாத அளவுக்கு, பெரிய துண்டைக் கவ்விக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விழிக்கின்றன ஏகாதிபத்தியங்கள். (முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் உண்மை நிலையை அரசு மூடி மறைக்கின்றது

## ரவி எம்.பி.தெரிவிப்பு

அரசாங்கம் கிராமத்து சண்டியரைப் போன்று செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை தீர்மானத்தின் அடிப்படையிலான விசாரணைகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

விசாரணை நடத்தி பொருளாதாரத் தடை விதித்தால் அதனால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர். ஏற்கனவே மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் மேலும் நிலைமைகள் மோசமடையக் கூடும். நாட்டின் உண்மை நிலைமைகளை அரசாங்கம் மூடிமறைக்கின்றது.

அரசாங்கம் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்றது, எனினும் மக்களின் கைகளில் பணமில்லை.

விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய நேரிடும்.

வாழ்க்கைச் செலவு பாரியளவில் உயர்வடைந்துள்ளது. மக்கள் வாழ்க்கையை முன்னெடுக்க முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பூட்டான் தேசிய பேரவை உறுப்பினர்கள் குழு பாராளுமன்றில்

இலங்கைக்கு வருகை தந்துள்ள பூட்டான் நாட்டின் தேசிய பேரவையின் தலைவர் தலைமையிலான 10 பேர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்திற்கு வருகை தந்ததுடன், சபை அமர்வுகளையும் பார்வையிட்டனர். பாராளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது.

வாய்மூல விடைக்காக ஐ. தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க எழுப்பிய கேள்விக்கு நிதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளித்துக்கொண்டிருக்கும்போது 1.10 மணியளவில் சபைக்குள் பிரவேசித்த பூட்டான்தேசிய பேரவை உறுப்பினர்கள் வருகை தந்து சபாநாயகர் கலரியில் அமர்ந்து கொண்டனர்.

பூட்டான் தேசிய பேரவையின் தலைவர் கலாநிதி சோனம் கிங்கா தலைமையிலான தூதுக் குழுவினரை கௌரவத்துடன் வரவேற்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

இதன்போது அவர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தியதுடன் சபாநாயகர் கலரியை பார்த்த வண்ணம் அமைச்சர்கள், ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மேசையில் தட்டி வரவேற்றனர.

சுமார் 30 நிமிடங்கள் சபாநாயகர் கலரியில் அமர்ந்த வண் ணம் சபை நடவடிக்கைகளை பார்வையிட்ட 10 பேர் அடங்கிய பூட்டான் தேசிய பேரவை உறுப்பினர்கள் 1.40 மணியளவில் சபையிலிருந்து வெளியேறினர். (2)

# போலியோவை ஒழித்த இலங்கைக்கு சான்றிதழ்

## உலக சுகாதார நிறுவனம் வழங்கியது

போலியோ நோயை முழுமையாக கட்டுப்படுத்தியதற்கான சான்றிதழை இலங்கைக்கு உலக சுகாதார நிறுவனம் வழங்கியுள்ளது. தெற்காசிய நாடுகளில் 11 நாடுகள் உள்ளடங்கிய பிரதேசத்தை போலியோ நோய் வைரஸ் முற்றாக ஒழிக்கப்பட்ட வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

வலயத்திலுள்ள ஏனைய நாடுகள் போலியோவை ஒழிக்க கால தாமதம் ஏற்பட்டதாலே இலங்கைக்கான சான்றிதழ் தாமதமாக வழங்கப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான சான்றிதழை உலக சுகாதார நிறுவன இலங்கைப் பிரதிநிதி டாக்டர் பிர்நௌஸி ருஸ்டம் மெஹதா சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார்.

இலங்கையில் முதலாவது போலியோ நோயாளி 1944 ஆம் ஆண்டில் அங்கு அடையாளம் காணப்பட்டார். அந்த வருடத்தில் 4 போலியோ நோயாளர்கள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டனர்.

1988ஆம்ஆண்டளவில்போலியோ நோயை முழுமையாக இலங்கையில் கட்டுப்படுத்த முடிந்தது. 1990 முதல் ஒரு போலியோ நோயாளியும் இலங்கையில் கண்டுபிடிக்கப்படவில்லை. இலங்கையில் இருந்து போலியோ நோய் ஒழிக்கப்பட்டு 24 வருடங்கள் கடந்து விட்டன.

ஆனால்வலயத்தின்ஏனைய நாடுகளில்போலியோ நோயை ஒழிக்க கால தாமதமேற்பட்ட நிலையில் இலங்கையை போலியோ இல்லாத நாடாக பெயரிட தாமதம் ஏற்பட்டது. (2)

# போர் நிறைவடைந்த போதும் கைதுகள் தொடர்கின்றன

## பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி

(கொழும்பு)

வடக்கு மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிட்டவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தின அமர்வின் போது இடம் பெற்ற நான்கு திருத்தச்சட்டங்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்.


போர் நிறைவடைந்துள்ள நிலையிலும் வடக்கில் கைதுகள் ஓய்ந்தபாடில்லை.

இன்னமும் வடக்கு மக்களை பாதுகாப்பு தரப்பினர் கைது செய்து வருகின்றனர்.

இதனால் பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

வீடுகள் தொடர்ந்தும் சோதனையிடப்படுகின்றன.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நிலைமைகளில் மாற்றமில்லை என அவர் தெரிவித்துள்ளார். (2)



நுணாவில் மேற்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா அண்மையில் நடைபெற்ற போது... (படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# இன்று ஒரு தகவல்

## கத்தியும் புத்தியும்

ஒரு வீட்டிலே திருடுவதற்கு திருடனொருவன் திட்டமிட்டான். இருட்டிய பின்னர், வீட்டிலுள்ளவர்கள் தூங்கிய பின்னர்தான் திருட வேண்டும். ஆனால் இரவில் படுக்கப்போகும் போது கதவைச் சாத்தி உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டு விடுவார்களே... என்ன செய்வது என அந்தத் தீருடன் யோசித்தான். பகல் நேரத்தில் யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டினுள் நுழைந்து ஒளிந்து கொள்வோம்... இராத்திரி எல்லோரும் தூங்கிய பின்னர் வீட்டிலிருக்கும் பெறுமதியான பொருட்களை எடுத்துக் கொண்டு ஓடி விடுவோம் எனத் திட்டமிட்டான்.

அதற்கமைய ஒருநாள் பகல் நேரத்தில் அந்த வீட்டுக்காரர் வெளியே புறப்பட்டுச் சென்ற பின்னர், வீட்டுக்கார அம்மா சமையல் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரம் மெதுவாக உள்ளே நுழைந்துவிட்டான். ஒளிந்து கொள்வதற்குப் பொருத்தமான இடத்தைத் தேடினான். வலது பக்கத்தில் ஒரு அறை இருந்தது. மெதுவாக அதைத் திறந்து பார்த்தான். அது படுக்கை அறை. உள்ளே ஒரு பெரிய கட்டில் இருந்தது. திருடன் அந்தக் கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான். இரவில் எல்லோரும் தூங்கியதும் வேலையை ஆரம்பிக்கலாமென இரவு வரும் வரை காத்திருந்தான்.

இரவு நேரத்தில் வெளியே சென்றிருந்த வீட்டுக்காரன் திரும்பி வந்தான். சாப்பாட்டை முடித்துக் கொண்டு லைற்றை நிறுத்தி விட்டுப் படுத்துக்கொண்டான். வீட்டுக்கார அம்மாவும் தனது வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு வந்து படுத்துக் கொண்டார். நடு இராத்திரி. விடிவிளக்கு லேசாக எரிந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரன் கண்விழித்தான். கட்டிலுக்கு நேர் எதிரில் ஒரு கண்ணாடி அதிலே, கட்டிலுக்கு கீழே ஒளிந்து கொண்டிருந்த திருடனின் உருவம் தெரிந்து உடனே "திருடன்... திருடன்" என்று சத்தம் போடலாமா? மேசையில் இருக்கிற கத்தியை கையில் எடுத்துக் கொள்ளலாமா? என்று யோசித்தான். இந்த நேரத்திலே கத்தியை உபயோகப்படுத்துவதை விடப் புத்தியை உபயோகிப்பது தான் புத்திசாலித்தனம் என்று நினைத்தான். அதன்படி செயற்பட ஆரம்பித்தான். தூங்கிக் கொண்டிருந்த மனைவியை மெதுவாக தட்டி எழுப்பினான்.

மனைவியுடன் ரொம்ப சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான். மனைவியும் புத்திசாலி. அதனாலே கணவன் ஏதோ காரணத்துடன் தான் பேசுகிறான் என்பதை உணர்ந்து அதற்கேற்றபடி பதில் சொல்ல ஆரம்பித்தான். கணவன் கேட்டான் இதோ பார்... எங்களுக்குக் குழந்தை பிறந்தால் அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்று தான் பெயர்வைக்க வேண்டும்.

"அதெல்லாம் முடியாது... ஆண் குழந்தையாக இருந்தால் ஏகாம்பரம்... பெண் குழந்தையாக இருந்தால் பங்கயவல்லி. இதுதான் உங்கள் மாமனார் மாமியார் பெயர். இதைத்தான் வைக்கவேண்டும்" என்றாள் மனைவி. அதெல்லாம் முடியாது. நான் தீர்மானித்து விட்டேன்... கிருஷ்ணமூர்த்திதான் எனக் கத்தினான் கணவன். "இல்லை... ஏகாம்பரம் பங்கயவல்லி, என்று கத்தினாள். மனைவி வாதம் பலித்துவிட்டது. "கிருஷ்ணமூர்த்தி... கிருஷ்ணமூர்த்தி... என்று இவன் கத்த, ஏகாம்பரம்–பங்கயவல்லி ... ஏகாம்பரம்– பங்கயவல்லி" என்று அவள் கத்த ஒரே சத்தம். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் பக்கத்து வீடு, எதிர் வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்திருந்து ஓடிவந்து இவன் வீட்டுக் கதவை தட தட என்று தட்டினார்கள். இவன் சாவகாசமாக எழுந்துபோய் கதவைத் திறந்தான்... "என்ன நடந்தது? இந்த அர்த்த இராத்திரியிலே ஏன் எங்களையெல்லாம் கூப்பிட்டீர்கள் என்று கேட்டார்கள்? பக்கத்துவீட்டு கிருஷ்ணமூர்த்தி, எதிர்த்த வீட்டு ஏகாம்பரம், பங்கயவல்லி உங்கள் ஒருவரையும் கூப்பிடவில்லை. எங்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி எனக்கும் மனைவிக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டுவிட்டது. இதுதான் விடயம். உங்களுக்குச் சந்தேகம் என் றால் கட்டிலுக்குக் கீழே இருப்பவரிடம் கேட்டுப்பாருங்கள்" என்றார். உடனே எல்லோரும் விடயத்தைப் புரிந்து கொண்டு கட்டிலுக்கு அடியில் ஒளிந்திருந்த திருடனைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள்.

நெருக்கடியான நேரங்களிலே பதறாமல் புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கதை. புத்திசாலித்தனமாகச் செயற்படும் ஒரு குடும்பத் தலைவி இருந்தார். அவர் என்ன செய்வார் தெரியுமா? இராத்திரியானால் எல்லோரும் வீட்டை உட்புறமாகப் பூட்டிக் கொண்டு தானே படுப்பார்கள். ஆனால் அந்த அம்மா பக்கத்து வீட்டுக்காரரிடம் சொல்லி கதவை வெளிப்புறமாக பூட்டுப்போட்டு பூட்டும்படி செய்துவிடுவார். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? வெளியே பூட்டினால் திருடன் சுலபமாகப் பூட்டை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து விடுவானே?" என்று கேட்டேன் "அதற்காக இல்லை. உள்ளே இருப்பவர் சுலபமாக வெளியே போய்விடக்கூடாது. அல்லவா? அதற்காகத்தான் இந்த ஏற்பாடு" என்றார் அந்த அம்மா! என்ன சொல்கிறீர்கள் என்றேன். "ஆமாம்... இவருக்கு அந்தப் பழக்கம் உண்டு" என்று தன் வீட்டுக்காரரைக் காட்டினார் அவர்.

பக்கத்து வீடுகள் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காக தன் வீட்டைப் பூட்டி வைப்பது ஒரு பெரிய விடயம் இல்லையா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைவஸ்து கடத்தல் சந்தேகநபர் குறித்து பிரித்தானியா அக்கறை

இலங்கையில் அண்மையில் கைப்பற்றப்பட்ட போதைவஸ்து தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் குறித்து பிரித்தானியா இராஜதந்திரி காட்டும் அக்கறை குறித்து கொழும்பில் வியப்பு வெளியிட்டுள்ளது. த ஹிந்து இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 3 ஆம் திகதியன்று பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர், இலங்கையின் பொலிஸ்மா அதிபர் என் கே இலங்கக்கோனிடம் சந்திப்பு ஒன்றுக்கான கோரிக்கை விடுத்தார்.

போதைவஸ்து கைப்பற்றல் தொடர்பில் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று நாட்டவர்களில் ஒருவர், இந்தியாவில் உள்ள பிரித்தானிய அதிகாரிகளுக்கு தகவல் தருபவர் என்ற அடிப்படையிலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக பிரித்தானிய இராஜதந்திரி விளக்கமளித்துள்ளார்.

இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டமையை பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன் உறுதிப்படுத்தியுள்ளார். எனினும் இது தொடர்பில் பிரித்தானியாவின் இலங்கை உயர்ஸ்தானிகரகம் எதனையும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் விசாரணைகள் முடிவடையாதபடியால் விசாரணைகள் முடிந்த பின்னர் இந்த சந்திப்பை மேற்கொள்ளலாம் என்று இலங்கையின் பொலிஸ்மா அதிபர் பிரித்தானிய இராஜதந்திரிக்கு பதிலளித்துள்ளார்.

கடந்த மார்ச் 6 ஆம் திகதியன்று கொழும்பு துறைமுகத்தில்வைத்து சுங்கப் பகுதியினர் 35 கிலோ கிராம் ஹெரோயினை கைப்பற்றினர்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி பாகிஸ்தானிய பிரஜை ஒருவரும் இலங்கை வம்சாவளியான கனேடிய பிரஜை மற்றும் இலங்கையர் ஒருவர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் முதலில் பாகிஸ் தானிய பிரஜை கைது செய்யப்பட்டார். இதனையடுத்து அவர் கண்டிக்கு தப்பிச்செல்வதற்கு உதவிய கனேடிய பிரஜை கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இருவரும் அடிக்கடி இலங்கைக்கு வந்துசெல்பவர்கள் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (2)

# சி.கா.செந்திவேல் ஜேர்மனி பயணம்

சர்வதேச புரட்சிகரக் கட்சிகள் அமைப்புக்களின் ஒருங்கிணைப்பிற்கான அமைப்பின் (ICORE) இரண்டாவது மாநாடு அடுத்த வாரத்தில் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக புதிய ஜனநாயக மாக்சிச லெனிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் ஜேர்மன் பயணமாகியுள்ளார்.

ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள மேற்படி மாநாட்டில் சர்வதேச அரசியல் பொருளாதார நிலைமை சமகால அரசியல் போக்குகள் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் இடம்பெறும் மக்கள் போராட்டங்கள், இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் பிரதான முரண்பாடாக இருந்து வரும் தேசிய இனப்பிரச்சினை போன்ற விடயங்கள் பற்றி மாநாட்டில் விவாதிக்கப்படவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவும் உள்ளன. இம் மாநாட்டின் பின்னர் தோழர் சி.கா. செந்திவேல் பிரான்ஸ் உட் பட ஐரோப்பிய நாடுகளில் கருத்தரங்கங்களிலும் கூட்டங்களிலும் கலந்து கொண்டு நாடு திரும்புவார். (2)

# சைக்கிள்களுக்கு ஒளிரும் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் தேசிய திட்டம் ஆரம்பம்

வீதி விபத்துக்கள் காரணமாக கடந்த 10 வருட காலத்தில் 2 ஆயிரத்து 691 சைக்கிளோட்டிகள் இறந்துள்ளனர். கடந்த வருடத்தில் மாத்திரம் 258 சைக்கிளோட்டிகள் இறந்துள்ள னர்.

இந்நிலையில் வீதி விபத்துக்களினால் சைக்கிளோட்டிகள் பலியாவதைத் தடுப்பதற்காக சைக்கிள்களில் ஒளிரும் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் தேசிய திட்டமொன்றை முன்னெடுக்க போக்குவரத்து அமைச்சு வீதிப் பாதுகாப்பு தேசிய மன்றத்துடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான தேசிய நிகழ்வு இன்று பிற்பகல் 7 மணிக்கு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவின் தலைமையில் களுத்துறை, வாத்துவ பகுதியில் நடைபெறவுள்ளது.

இதன்போது முதற்கட்டமாக 40 ஆயிரம் சைக்கிள்களுக்கு இலவசமாக பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் வழங்கப்பட இருப்பதாக வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத் தலைவர் சட்டத்தரணி காமினி ஏகநாயக்க தெரிவித்தார். இந்தத் தேசிய திட்டம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த காமினி ஏகநாயக்க, வாகன விபத்துக்களினால் தினமும் 6 முதல் 7 பேர் வரை இறக்கின்றனர். 115 பேர் காயமடைகின்றனர்.

2012 இல் 2 ஆயிரத்து 444 பேரும் 2013 இல் 2ஆயிரத்து 340 பேரும் வீதி விபத்துக்களினால் இறந்தனர். முன்னர் பயன்படுத்தப்பட்ட மிதி வண்டிகள் உரிய தரத்தில் இருந்தன, அவற்றில் முன்பின் கவசங்களில் வெளிச்சம் இருக்கும். தற்பொழுது தரமற்ற சைக்கிள்கள் பயன்படுத்தப்படுவதால் இரவில் அதிக விபத்துக்கள் சம்பவிக்கின்றன.

அதனால் மிதிவண்டிகளில் ஒளிரும் ஸ்ரிக்கர்கள் ஒட்டி விபத்துக்களை மட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதனூடாக விபத்துக்களைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கிறோம். ஆட்டோ, சைக்கிள் என்பவற்றில் முன்பக்கமும் பின்பக்கமும் மின்குமிழ்கள் பொருத்துவது தொடர்பில் சட்டம் இருந்தாலும் அவை அமுல்படுத்தப்படுவதில்லை. சைக்கிளோட்டிகளை முதலில் அறிவுறுத்திய பின்னர் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளோம் என்றார். (2)

# புகலிட கோரிக்கையாளர் தற்கொலைக்கு முயற்சி

அவுஸ்திரேலியாவில் இலங்கை புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தனக்கு தானே தீ வைத்த சம்பவம் ஒன்று சிட்னியில் உள்ள ஹோம் புஸ ரைட் வீதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் 60வீத எரி காயங்களுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் கொன்கோர்ட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது கோமா நிலையில் உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவக்கின்றன. இலங்கை வட மாகாணத்தை சேர்ந்த ஜனர்தணன் என்பவரே இவ்வாறு தீ வைத்துள்ளார் .

நேற்று முன்தினம் குடிவரவு திணைக்களத்தால் இவருடைய அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டுள்ளதாகக் அறிவிக்கப்பட்டதும் இவர் தீ வைத்துள்ளதாக தகவல் தெரிந்துள்ளது. (2)

# குவைத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் அழைத்துவரப்படுவர்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

குவைத்தில் வேலைவாய்ப்புக்காகச் சென்று அங்கு சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 160 இலங்கையர் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் உள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்

கொலை, கொள்ளை, மது அருந்துதல், முறைகேடான தொடர்பு போன்ற காரணங்களூடாக குவைத் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு சிறையில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் கேட்ட வாய்மொழி மூல விடைக்கான கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பல்வேறுபட்ட காரணங்களுக்காக தாங்கள் தொழில் புரியும் இடத்தில் இருந்து வெளியேறி குவைத்திலுள்ள ஊழியர்களை அந்நாட்டு பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக அவர்களது தொழில் தருநரின் பொலிஸ் முறைப்பாட்டை இரத்துச் செய்தல், கை ரேகை பதிவு செய்தல். வெளியேறுவதற்கான தற்காலிக அனுமதி பத்திரத்தை பெறல் போன்ற நடவடிக்கைகள் முடியும்வரை அவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பார்கள்.

இவ்வாறு பல்வேறுபட்ட தவறுகளுக்காக தண்டனை அனுபவிக்கும் இலங்கையர் தொடர்பாக ஆராய்வதற்கு வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் பிரிவிலுள்ள அதிகாரிகள் செயற்பட்டு வருகிறார்கள்.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்காகவும், தற்காலிக இடங்களில் தங்கியிருப்பவர்களை அழைத்து வருவதற்குமாக தற்காலிக அனுமதி பத்திரம். விமான பயண சீட்டு என்பவற்றை பெற்றுக் கொடுக்க பணியகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பணியகம் எவ்வித காலதாமதமுமின்றி இதனை செய்து வருகிறது. அந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக வெகு விரைவில் இவர்கள் அழைத்து வரப்படுவார்கள் என்றும் அமைச்சர் டிலான் தெரிவித்தார். (2)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை விசாரிக்க விசேட நீதிமன்றங்கள்

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான வழக்குகளை துரிதமாக விசாரிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாகாணங்களுக்கு என விஷேட நீதிமன்றங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்பொழுது கொழும்பு, யாழ்ப்பாணத்தில் விஷேட நீதிமன்றம் செயற்படுவதுடன் கண்டி மற்றும் குருநாகலிலும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. ரோஸி சேனநாயக்க வாய் மூல விடைக்காக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார். அதேபோன்று இது போன்ற வழக்குகளின் இரகசிய தன்மைகளைப் பாதுகாக்கும் வகையில் பிரத்தியேக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

பொதுவாக வழக்குகள் தொடர்பாக சந்தேக நபர்கள் மற்றும் குற்றவாளிகளான வழக்குகள் என புள்ளி விபரங்கள் பேணப்படுகின்ற போதிலும் ஒவ்வொரு தவறுக்காகவும் புள்ளி விபரங்கள் பேணப்படுவதல்லை என்று தெரிவித்த அவர், இதனால் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கள் கற்பழிப்பு தொடர்பான குற்றவாளிகள் தொடர்பில் புள்ளி விபரங்கள் பெறமுடியாதுள்ளது என்றார். (2)



கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் அதிபர் கனகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது அதிபர் எம்.கனகலிங்கம் தலைமையில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் தொழிலதிபர் என்.பாஸ்கரன் உரை நிகழ்த்துவதையும் திருமதி. பாஸ்கரன் மாணவனொருவனுக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தும்பளைச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகழ்வாராய்ச்சி பணிகளில் ஈடுபடேன்-மேதானந்த தேரர்

எதிர்வரும் காலங்களில் அகழ்வாராய்ச்சி பணிகளில் ஈடுபடப் போவதில்லை என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பெரும் மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளேன். எனவே, எதிர்வரும் காலங்களில் அகழ்வாராய்ச்சி பணிகளில் ஈடுபடப் போவதில்லை.

மிக முக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாப்பதில் அதிகாரிகள் உரிய கவனம் செலுத்துவதில்லை.

சகலவிதமான அகழ்வாராய்ச்சி பணிகளிலிருந்தும் விலகிக் கொள்கின்றேன்.

அகழ்வாராய்ச்சி பணிகளிலிருந்து விலகிக் கொள்வது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளேன் என மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த அடையாளங்களை உறுதி செய்வதில் எல்லா வல மேதானந்த தேரர் கூடுதல் சிரத்தை எடுத்துக்கொண்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியில் முக்கிய பதவிகளை வகித்த இவர், சிங்கள பௌத்தர்களின் வரலாற்றுச் சின்னங்கள் தொடர்பிலான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# போலி ஆவணங்கள் தயாரித்த 9 பேர் கைது

போலி ஆவணங்கள் தயாரித்து 80 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் 9 சந்தேக நபர்கள் கல்கிசை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை விசேட குற்ற விசாரணை பிரிவிற்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வசமிருந்து 102 இறப்பர் முத்திரைகள், ஆட்பதிவு திணைக்களம் என்று கூறப்பட்டுள்ள 10 அட்டைகள், போலி அடையாள அட்டைகள் 4, மடிக் கணனி மற்றும் கார் போன்றவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கல்கிசை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு எதிாவரும் 16ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (2)

# ஐ.நா. விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைக்காது

## செயலாளர் சுஜாதா சிங்

இலங்கை மீதான ஐக்கிய நாடுகள சபையின் விசாரணைகளுக்கு ஆதரவளிக்கப்பட மாட்டாதென இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார செயலாளர் சுஜாதா சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப பேரவையில் அண்மையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், ஐக்கிய நாடுகள் அமைப்பின் அதிகாரத்தை மீறிய செயலாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவளிக்காததன் மூலம், இலங்கையுடன் நெருங்கிச் செயற்படக் கூடிய சாத்தியம் கிட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழர் விவகாரத்தில் இந்தியா என்ன விடயத்தை எதிர்பார்க் கின்றது என்பதனை இலங்கை அரசாங்கம் சரியாக புரிந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், இந்தியா அதற்கான முயற்சிகளை எடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையுடன் இந்தியா மிக நெருங்கிய தொடர்புகளை பேணி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### செல்லப்பா குமாரசாமி

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா குமாரசாமி கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு St. John's Norway Cemetery & Crematorium , 256 Kingston Rd, Toronto, ON M4L 1S7, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### அமிர்தநாதர் அன்ரன்

இளவாலையைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் ஜெனீவாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தநாதர் அன்ரன் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு Chemin, Docteur Adolphe, Pasteur, 35, Geneva என்னும் முகவரியில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### சித்திரவேலு கணேசதாஸ் காந்தி

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சித்திரவேலு கணேசதாஸ் காந்தி கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Lambeth Cemetery, Blackshaw Rd, Tooting, London SW17 OBY,United Kingdom என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### இராமநாதன் சண்முகம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சண்முகம் கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Rideau Funeral Home 4275 Sources Blvd Dollard Des OrmeauxQC H9B 2A6 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஆசையர் நடராஜா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசையர் நடராஜா (ஓய்வு பெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்) கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்குChapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி திருநாவுக்கரசு இராஜேஸ்வரி

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் இளவாலை 8 ஆம் கட்டை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராஜேஸ்வரி கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நடராசா சரஸ்வதி

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சரஸ்வதி கடந்த 8 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி செல்லத்துரை றெஜீனா

கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை றெஜீனா கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் மரியன்னை தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

# சிறைச்சாலைகளுக்கு தொலைபேசி வசதிகள்

சிறைக் கைதிகளுக்கு தொலைபேசி அழைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைக்குள் அமைக்கப்படவுள்ள விசேட தொலைபேசி கூடத்தில் சிறைக் கைதிகள் அழைப்புகளை எடுக்க முடியும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

சிறைக்குள் இருந்து கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த இத்திட்டம் உதவும் என அவர் குறிப்பிட்டார்.

உறவினர்களுடன் உரையாட வாய்ப்பு இல்லாததால் கைதிகள் சட்டவிரோதமான முறையில் கைத்தொலைபேசி பயன்படுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

திட்டத்தின் ஆரம்பமாக இன்று வெலிக்கடை சிறையில் தொலைபேசி கூடம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

தொலைபேசி அழைப்பு எடுக்கும கைதியின் கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (2)

# பாராளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களின் வருகை குறைவு காரணத்தினால் நேற்று பாராளுமன்றம் கூடி ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களில் சபை நடவடிக்கைகள் நிறைவுக்கு வந்தன.

பாராளுமன்ற நடவடிக்கையை கொண்டு நடத்த குறைந்தது 20 உறுப்பினர்கள் இருக்க வேண்டிய நிலையில் நேற்றைய தினம் 17 பேரே இருந்துள்ளனர்.

அதனால் பாராளுமன்றத்தை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை ஒத்தி வைக்க பிரதி சபாநாயகர் சந்திர வீரக் கொடி தீர்மானித்தார். (2)

# இரு மாதங்களில் 65 பேர் கைது

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப உதவி செய்ததாகக் கூறப்படும் 65 பேர் கடந்த 2 மாதங்களில் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அதில் ஐவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

10 பெண்களில் எண்மர் பூசா முகாமிலும் இருவர் வவுனியா தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு பணம் இவர்களிடம் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (2)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

க.பொ.த (சா/த) பரீட்சை -2013 பெறு பேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சையில் முன்னணி பெறு பேறுகளைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

ப.காண்டீபன்-8ஏபி, ஆ.கோகுலன் -7ஏபிசி, ச.சஞ்சீவனா-7ஏபிசி, வி.கீர்த்தனா-7ஏபிசி, ஸ்ரீ.சஜீவன்-6ஏ2பிசி, வா.சுபா-6ஏ2பிசி, ஜெ.கீர்த்தனா-6ஏ2பிசி, கே.கெனிஸ்ரன்-5ஏ2பிசிஎஸ்.

**யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை**

ப.சஜீபா-5ஏபிசி2எஸ், வே.வேணுயா-4ஏ3பிசிஎஸ், செ.கீர்த்தனன்-4ஏபிசி3எஸ்

**யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

நா.துவாரகா-9ஏ, சு.ஹம்சாயினி-9ஏ, ம.மோகனரூபி-8ஏபி, கு.தனுசியா-8ஏபி, சை.சுபவாஷினி-8ஏபி, த.பொன்ஜா-8ஏபி, ஜெ.தனுஜா-8ஏசி, ர.மகிந்தா- 7ஏ2பி, மு.மது ஷா-7ஏபிசி, சி.கோபிகா- 7ஏபிசி, ச.பாமதி-6ஏ2பிசி, க.நிதர்சினி-6ஏ2பிசி, கி.தர்சனா- 6ஏ2பிஎஸ்

**கரவெட்டி யா/தேவரையாளி இந்துக்கல்லூரி**

யோ.நிருஜா-7ஏபிசி, சி.புரந்தகா-5ஏபி2சிஎஸ், த.கோமகன்-4ஏ2பி 3சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோவில் தேர்தல்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில்,பாராளு மன்றம் மற்றும் பல மாகாண சட்டசபை தேர்தல்கள் நடைபெறு கின்றன.

உலகின் பெரிய முஸ்லிம் நாடு, இந்தோனேசியா பல ஆயிரம் தீவு களை கொண்டது. 560 இடங்கள் கொண்ட பார்லிமென்டுக்கும், 19 ஆயிரம் இடங்கள் கொண்ட மாகாண சட்ட சபைகளுக்கும் நேற்று முன் தினம் தேர்தல் நடந்தது.

இங்கு, 18.6 கோடி பேருக்கு வாக்களிக்கும் உரிமை உள்ளது. 2.30 இலட்சம் வேட்பாளர்கள் களத் தில் உள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி சுசி லோ பாம்பங், இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்ததால், அரசி யலமைப்பு சட்டப்படி மூன்றாவது முறை போட்டியிட, அவரால் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவரது ஆட்சி மீது ஊழல் புகார் கள் கூறப்பட்டதால், எதிர்க்கட்சியான இந்தோனேசிய ஜனநாயக கட்சிக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம் உள்ள தாக கூறப்படுகிறது.

தற்போது ஜகார்த்தா மாகாண ஆளுநராக உள்ள, ஜோகோ விடோ டோவுக்கு அடுத்த ஜனாதிபதியாகும் வாய்ப்புக்கள் உள்ளதாக, அந்நாட்டின கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின் றன.

இந்தோனேசியா, கடினமான பூகோள அமைப்பை கொண்டது. பல தீவுகளுக்கு போக்குவரத்து வசதியே கிடையாது. இன்னும் பல தீவுகளில் எரிமலைகள் குமுறி கொண்டிருக்கின் றன. பெரும்பாலான தொகுதிகளில் பலத்த மழை பெய்து கொண்டிருக் கிறது.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலை யிலும், இன்னும் பல தொகுதிகளு க்கு வாக்குப் பெட்டி போய் சேர வில்லை. வானிலை சீரின்மையால் விமானங்கள் மூலமும் வாக்கு பெட்டி களை அனுப்ப இயலாத சூழல் உள் ளது.

எனவே, .30 மாவட்டங்களில் மூன்று நாட்கள் தாமதாக தேர்தல் நடக்க இருக்கின்றன.

தேர்தல் நடந்து முடிந்து, வாக்குப் பெட்டிகள் தலைநகரம் வந்து சேர காலதாமதமாகும் என்பதால், அடு த்த மாதம் இறுதியில் தேர்தல் முடிவு கள் அறிவிக்கப்படவுள்ளன. (2)



ஈரானிற்கு வருகைதந்துள்ள அஜர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ்வை தலைநகர் டெஹ்ரானில் வைத்து ஜனாதிபதி அயோத்துல்லா அலி காமினேயை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் பழச்சந்தையை அதிரவைத்த குண்டுவெடிப்பு

## 23 பேர் உடல் சிதறி பலி; 100 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம்

(இஸ்லாமாபாத்)

***இஸ்லாமாபாத் பழச் சந்தையில் குண்டு வெடித்ததில் அப்பாவி பொதுமக்கள் 23 பேர் உடல் சிதறி பலியாகினர். 100 இற்கும் மேற் பட்டோர் படுகாயம் அடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.***



இச் சம்பவம் பாகிஸ்தான் நகர் இஸ்லாமாபாத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

இது தொடர்பாகத் தெரிய வருவ் தாவது,

ராவல்பிண்டி நகரை ஒட்டி அமைந்துள்ள குறித்த சந்தையில் தினமும் பழங்கள் ஏலத்தில் விடப்ப டும். நேற்று முன்தினம் பழங் களை வாங்க வர்த்தகர்கள் குழுமி இருந்தனர். அப்போது, அங்கு சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 23 பேர் உயிரிழந்தனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் பாகிஸ் தான் மருத்துவ அறிவியல் நிறுவ னம் மற்றும் ராவல்பிண்டி மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

சந்தைக்கு கொண்டு வரப்பட்ட கொய்யாப்பழ பெட்டியில் 5 கிலோ எடை கொண்ட வெடிகுண்டு மறை த்து வைத்து கொண்டு வரப்பட்டது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு நிகழ் ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இச்சம்பவம் நடந்துள்ளது.

ஏப்ரல் 10 ஆம் திகதி வரை பாகி ஸ்தான் அரசுடன் போர் நிறுத்தம் செய்வதாக தலிபான் தீவிரவாத அமைப்பு அறிவித்துள்ள நிலையில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

, இது தொடர்பாக பொலிஸார் விசா ரணை நடத்தி வருகின்றனர். (2)

## கறுப்பு பெட்டியின் சிக்னல் கிடைப்பு

### தேடும்பலம் தொடர்கிறது




விமானத்தை தேடும் பணி மீண் டும் இருமுறை சிக்னல் அவுஸ்ரே லிய கப்பலுக்கு கிடைத்துள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ள னர்.

மாயமான விமானத்தை தேடும் பணியில்,ஈடுபட்டுள்ள அவுஸ்ரே லிய ஓசன் ஷீல்டு கப்பலில் நேற்று முன்தினம் மாலை மற்றும் இரவு என இருமுறை கப்பலுக்கு விமான த்தின் கறுப்பு பெட்டியின் சிக்னல் கிடைத்துள்ளது என கப்பலின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

மேலும் இது குறித்து விமான த்தை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள ஓய்வு பெற்ற கப்பல் தளபதி மார் ஷல் கூறுகையில்,

தேடுதல் வேட்டை தற்போது சரி யான திசையில் செல்கிறது. எனி னும் சிதைவு பொருட்கள் கண்டறிய ப்பட்டால்தான் இதை உறுதிப்படுத்த முடியும் என்று கூறியுள்ளார். (2)

# எங்கள் விருப்பப்படி நடக்க யாருக்கும் கட்டளையிடமாட்டோம் - ஜான் கெர்ரி



உக்ரைனில் பதற்ற நிலையை அதிகரிக்கும் வகையில் ரஷ்யா தொடர்ந்து தலையிட்டு வருவதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்து ள்ளது.

வோஷிங்டனில் அமெரிக்க வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான நாடாளுமன்ற மேலவை உறுப் பினர்கள் குழுக் கூட்டம் நடை பெற்றது. இக் கூட்டத்தில் அந்நாட் டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரி கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

உக்ரைனின் கிழக்குப் பகுதி யில் ரஷ்ய ஆதரவாளர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. அந்தப் பகுதியில் மக்களிடம் குழப்ப த்தை ஏற்படுத்தி வரும் ரஷ்யாவின் செயலை ஏற்றுக்கொள்ளவே முடி யாது.

அங்கு அழிவை உண்டாக்கும் வகையில் அவர்கள் வெளிப்படை யான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அந் நாட்டின் இறையாண்மை க்கு குந்தகம்' விளைவிப்பதற்காக [illegible] இருந்து [illegible] சட்டத் துக்குப் புறம்பான செயல்களில் ரஷ்யா ஈடுபடுவதுடன், பிரிவினை வாதிகளையும் ஊக்குவிக்கிறது.

உக்ரைனின் கிழக்குப் பகுதி யில் இராணுவ நடவடிக்கைக்கு முன னோட்டமாகவே இதுபோன்ற செயல் களில் ரஷ்யா இறங்கியுள்ளது.

இந்த விடயத்தில் யாரையும் முட்டாளாக்க முடியாது. கிரீமியா வில் என்ன நடந்ததோ அதுவே இங்கும் நடைபெறப் போகிறது.

இந்த பிரச்சினைக்கு ராஜீயரீதி யான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வருகிறது.

ஆனால், சிறிதளவும் அதனைக் கண்டுகொள்ளாமல், சர்வதேச சட்ட விதிகளை மீறி விரும்பத்தகாத செயல்களில் ரஷ்யா ஈடுபடுவதை தடுத்து நிறுத்த வேண்டியது அவ சியம்.

கிழக்கு உக்ரைனில் பிரிவி னைவாதிகளை ஒடுக்கவும், சர்வ தேச சமுதாயத்துடன் இணைந்து உக்ரைனின் சுதந்திரத்தை நிலை நாட்டவும், கிழக்கு மற்றும் மேற்கு உக்ரைனுக்கு ஒரு பாலமாக திகழ வும் ரஷ்யாவுக்கு இன்னும் வாய்ப்பு உள்ளது.

ஆனால், இதற்கு போரை ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. உக்ரைனின் நலனில் அக்கறை கொள்ளவில்லையெனில் சர்வ தேச சமூகத்தில் இருந்து ரஷ்யா மேலும் தனிமைப்படுத்தப்படும் நிலையை எதிர்கொள்ளும்.

உலகில் பொருளாதார வலிமை யுடன் அமெரிக்கா வானளாவிய அதிகாரம் பெற்றிருந்தாலும், எங் கள் விருப்பப்படிதான் நடக்க வேண் டும் யாருக்கும் நாங்கள் கட்டளை யிட் மாட்டோம் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வா ரடீ!– கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி.
– பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தடுக்க மாநாடு கூட்டிய நீங்கள் குடிக்க மாநாடு கூட்டினால் என்ன?

இரணைமடுக்குள விவகாரம் கைவிடுதல் என்ற முடிவோடு அடங்கிக் போயிற்று. இரணைமடுக்குளத்து நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தே தீருவேன் என்று உறுதியாக இருந்த வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை, சம்பந்தர் தம் திருவாய் மலர்ந்து அமைதிப் படுத்தினார்.

இதன் காரணமாக இரணைமடுக்குளத்துத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவருதல் என்ற திட்டம் கைவிடப்படுவதான அறிவித்தலோடு அந்த முயற்சி முற்றுப்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயிகளுக்கே இரணைமடுக்குளத்துத் தண்ணீர் போதாது என்ற நிலைமையில், யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீரைக் கொண்டுபோவது எந்த அளவிற்கு நியாயமானது? என்ற கேள்வியை கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயிகள் முன்வைத்தனர்.

இந்நிலையில் இரணைமடுக்குளத்து தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லும் திட்டம் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், சந்திப்புக்கள், பேச்சுவார்த்தைகள் என்பன தடல்புடலாக நடந்தன.

சுருங்கக் கூறின், பாரதப் போருக்கு முன்னதாக நடந்த சல்லியன் தூதுமுதல் கிருஷ்ணன் தூது வரையான அத்தனை ஏற்பாடுகளும் இங்கும் நடந்தன.

முடிவில் இரணைமடுக்குளத்துத் தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு வழங்குவதில்லை என்பது தீர்ப்பாயிற்று.

இங்கு, இரணைமடுக்குளத்துத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும் திட்டம் கைவிடப்பட்டது பற்றியோ அதில் இருக்கக் கூடிய நியாயப்பாடுகள் பற்றியோ நாம் இங்கு ஆராயவில்லை.

நாம் இங்கு கூறுவதெல்லாம் இரணைமடுக்குளத்துத் தண்ணீரை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதா? இல்லையா? என்பது தொடர்பில் மாநாடு கூடித் திட்டத்தைக் கைவிட்ட நீங்கள், யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவுகின்ற குடிநீர்த் தட்டுப்பாடு தொடர்பில் மாநாடு கூடாதது ஏன்? என்பதுதான்.

யாழ்.மாவட்டத்தில் நீடித்துவரும் கடும் வறட்சி காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு பெருமளவில் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் தீவுப்பகுதி முழுவதுமாகக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் நாவற்குழி, கைதடி, மட்டுவில், புத்தூர், வாதரவத்தை உட்பட வடமராட்சியின் ஒரு பகுதியிலும் குடிநீர்த் தட்டுப்பாடு மோசமாகியுள்ளது.

குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்றால் அது தொடர்பில் கூட்டம் கூடி, மாநாடு நடத்தி குடிநீர் பிரச்சினையை தீர்ப்பது எப்படி என்று ஆராய்வது அவசியம்.

ஆனால், இதுவரை அத்தகைய முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. இரணைமடுக்குளத்துத் தண்ணீர் யாழ்ப்பாணம் வருவதைத் தடுப்பதற்கு மாநாடு கூட்டிய நீங்கள், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை எனும் போது அவசரமாக மாநாடு கூட்டவேண்டுமல்லவா? அதைச் செய்யாதது ஏன்?

இரணைமடுக்குளத்திட்டம் நிறுத்தப்பட்ட அதே நேரம் யாழ்.மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையை ஈடுசெய்வதற்கான மாற்று வழிகள் பற்றி உடனடியாக ஆராய வேண்டும். இது தொடர்பில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால், இது குறித்து எதுவுமே நடைபெறவில்லை என்பதுதான் நமக்கு இருக்கக் கூடிய வேதனை.

### ஊடக சந்திப்பில் உள்நுழைந்து குழப்பம்

# பொது பல சேனாவின் நடத்தைக்கு ஜே.வி.பி கடுமையான கண்டனம்

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் செயல்களை கடுமையாக கண்டிப்பதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது

அந்த கட்சியின் அரசியல் சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய பல சேனா என்ற அமைப்பு கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் அத்துமீறி பிரவேசித்த பொது பல சேனா அமைப்பினர், அந்த செய்தியாளர் சந்திப்பை குழப்பிய சம்பவத்தை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

பொது பல சேனா அமைப்பினர், ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பிக்குமார் உட்பட ஏற்பாட்டாளர்களை திட்டுவதையும், அவர்களை விரட்டுவதையும், பலவந்தமாக மன்னிப்பு கோர செய்வதையும் ஊடகங்களில் காணமுடிந்தது.

பொலிஸார் சம்பவ இடத்தில் இருந்த போதே பொது பல சேனா அமைப்பினர் இவ்வாறு நடந்து கொண்டனர்.

இந்த சம்பவமானது நாட்டில் தேசிய ஐக்கியம் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் பாரதூரமான சிக்கல் நிலைமையை ஏற்படுத்தும் என்பது எமது நம்பிக்கை.

தனி நபருக்கோ அல்லது ஒரு அமைப்புக்கோ அவர்கள் கொண்டுள்ள நிலைப்பாடுகளை ஊடக சந்திப்பை நடத்தி நாட்டுக்கு தெரியப்படுத்தும் உரிமை உள்ளது. இந்த உரிமை அரசியலமைப்புச் சட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாடுகளை தனி நபரோ ஒரு அமைப்போ ஏற்கவில்லை என்றால், அது பற்றி தமது நிலைப்பாடுகளை நாட்டுக்கு கூற வேண்டுமே அன்றி, பலவந்தத்தை பயன்படுத்தக் கூடாது.

பலவந்தமாக ஊடக சந்திப்பொன்றில் புகுந்து அதனை நிறுத்தியமையானது பொது பல சேனா வழங்கிய தவறான முன்னுதாரணமாகும்.

சகல அமைப்புகளும் இவ்விதமாக செயற்பட ஆரம்பித்தால், நாட்டில் ஏற்பட போகும் நிலைமையை புதிதாக கூற வேண்டியதில்லை.

மூன்று தசாப்த கால போர்ச் சூழலுக்கு பின்னர் தேசிய ஐக்கியம் பற்றி பேசப்படும் சந்தர்ப்பத்தில், இலங்கை பிரஜைகளை இன மற்றும் மத அடிப்படையில் பிளவுபடுத்தும் இவ்வாறான செயல்களை வன்மையாக கண்டிக்கின்றோம்.

பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில், ஒரு அமைப்பு அல்லது தனிநபர் இப்படி பலவந்தமாக நடந்து கொள்ள முடிந்துள்ளமையானது இதன் பின்னணியில் அரசாங்கத்தின் அனுசரணை இருப்பதை வெளிக்காட்டியுள்ளது.

இதனால் ஜனநாயக விரோத மற்றும் தேசிய ஐக்கியத்தை சிதைக்கும் இவ்வாறான ஒருதலைப்பட்சமான நடத்தைகளை தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

அத்துடன் தேசிய ஐக்கியத்திற்காக கைகோர்க்குமாறு சிங்கள, தமிழ், முஸ்லிம் என சகல சமூகத்தினரிடமும் சகோதரத்துவத்துடன் கோரிக்கை விடுக்கின்றோம் என ஜே.வி.பியின் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

# மைதான வடிகால் சீரின்மை; விளையாட்டு வீரர்கள் அவதி

(வவுனியா)

வவுனியா நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தின் வடிகான்கள் சீரின்றி காணப்படுகின்றமையால் விளையாட்டு வீரர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொது மைதானத்தை சூழவும் அமைந்துள்ள வடிகானுக்கு மேலாக சீமெந்து தூண்கள் சீராக போடப்படாமையினால் கிரிக்கெட் மற்றும் உதை பந்து விளையாடும் பொது ஆழமான வடிகான்களுக்குள் பந்து விழும் நிலை காணப்படுவதுடன் அதனை மீட்டு எடுப்பதிலும் பகிரதப்பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை வடிகான்கள் நீர் வழிந்தோடாமல் நீர் தேங்கி நிற்பதனாலும் விளையாடும் போது பந்துகள் வடிகானுக்குள் வீழந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு செல்வதாகவும் தெரிவிக்கும் விளையாட்டு வீரர்கள் வவுனியாவில் அமைந்துள்ள ஒரேயொரு பொது விளையாட்டு மைதானம் சீராக திருத்தப்படாமல் உள்ளமை தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றன.

இதேவேளை நகரசபையினால் அண்மையில் வடிகான்களை சீமெந்து தூண்களால் மூடுவதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டபோதிலும் அவை சீராக மேற்கொள்ளப்படாமையினாலேயே இவ்வாறான நிலை உள்ளது எனவும் சுட்டிக்காட்டும் விளையாட்டு வீரர்கள மைதானத்தின் வடிகான் கட்டுமான பணியின் தரத்தினை வட மாகாண உள்ளூராட்சி திணைக்களம் பார்வை யிட்டு சீர் செய்து தரவேண்டும் எனவும் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர் (செ-250)

# திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசையை முன்னிட்டு ஜய வருடம் முழுவதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் எதிர்வரும் ஜய வருடம் சித்திரை திங்கள் முதலாம் நாள் 14-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் தினமும் காலை 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரையும் மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையநாயன்மார் மண்டபத்தில் மாதம் ஒருதிருமுறை முற்றோதலென பன்னிருமாதமும் பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதப்படவுள்ளது.

விரும்பும் அடியார்கள் இதில் பங்கு பற்றி பயன்பெறலாமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (செ)

# இளம் பெண் கொலை; மூவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

16 வயதான இளம் பெண்ணுடன் வாழ்க்கை நடத்தி பின்னர், அந்த பெண்ணை கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கொலை செய்ததாக கூறப்படும் பெண்ணின் கணவர், அவரது தந்தை மற்றும் நண்பர் ஆகியோரை இன்று 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு எல்பிட்டிய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபரான கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் இரண்டு வருடங்களாக அப் பெண்ணுடன் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்த நிலையில், ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில், கடந்த மாதம் 25 ஆம் திகதி அப் பெண்ணை சந்தேக நபர ஏனையோருடன் இணைந்து கொலை செய்துள்ளதுடன் சடலம் கடந்த 5 ஆம் திகதி மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எல்பிட்டி – எல்லே, புவக்தொடெல்ல பிரதேசத்தை சேர்ந்த மகன், தந்தை மற்றும் மகனின் நண்பர் ஆகியோரே இந்த சம்பவம் தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபரின் நண்பர் வாக்குமூலம் வழங்கவுள்ளார் எனவும் பொலிஸார் கூறினர்.

சம்பவம் குறித்து எல்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

# "சரணாகதி" அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணியிலிருந்து 7.30 மணிவரை சரணாகதி என்ற கருப்பொருளிலான அருளுரையும் அது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளால் நடத்தப்பட உள்ளது. (செ)

### அமைதியின் சொற்கள்

உலகிற்கு அமைதி தேவையென மக்கள் கூறுகின்றார்கள். நானோ உங்கள் உலகில்தான் அமைதி தேவையெனக் கூறுகின்றேன். அமைதி உங்கள் உள்ளே இருக்கிறது. உங்கள் வாழ்க்கையில்அமைதியைக்கண்டுகொண்டு திருப்தியோடு இருப்பதற்கு தேவையான அனைத்தையும் செய்யுங்கள்.

*(பிரேம் ராவத்)*




### இறையச்சத்திற்கு கூலி

"நிச்சயமாக எவர்கள் தங்கள் இறைவனை (பார்க்காதிருந்தும்) அந்தரங்கத்தில் அஞ்சுகிறார்களோ, அவர்களுக்கு மன்னிப்புமுண்டு; பெரிய (நற்) கூலியும் உண்டு. மேலும் உங்கள் சொல்லை நீங்கள் இரகசிய மாக்குங்கள்; அல்லது அதைப் பகிரங்கமாக்குங்கள்; நிச்சயமாக அவன் நெஞ்சங்களிலுள்ளவற்றை மிக அறிந்தவன்."

(திருக்குர்ஆன் 67:12,13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி.தெற்கு உடுவில் பி.செயலக வருடாந்த இளைஞர் வி.விழா

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த இளைஞர் விளையாட்டு விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 2 மணி முதல் சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளன தலைவர் எஸ்.விஜிதரன் தலைமையில் இடம்பெற வுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித் தார்த்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வலி.தெற்கு உடுவில் பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ். தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந் திரன். கிருபா லேணர்ஸ் உரிமையாளர் ஏ.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆர்.ஈஸ் வரதாஸன். வலி.தெற்கு இளைஞர் கழக சம்மேளன முன்னாள் தலைவர் எஸ். பீஷ்மன். யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.சண்முகவடிவேல். யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தடகள நிகழ்வுகளின் இறுதி நிகழ்வு களும். அஞ்சலோட்ட நிகழ்வும் இடம்பெற வுள்ளது.

பெரு விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளாக கபடி. உதைபந் தாட்டம். கயிறிழுத்தல் என்பன இடம்பெற வுள்ளன.

ஆண்களுக்கான கபடி இறுதியாட்டத்தில் இணுவில் கலாஜோதி இளைஞர் கழக அணியும் இணுவில் கலையொளி இளை ஞர் கழக அணியும் மோதவுள்ளது.

உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் மயில ங்காடு ஞானமுருகன் இளைஞர் கழக அணியும் குப்பிளான் ஞானகலா இளைஞர் கழக அணியும் மோதவுள்ளது.

பெண்களுக்கான கயிறிழுத்தலில் சுன் னாகம் காந்தீயமன்றம் இளைஞர் கழக அணியும் உடுவில் முருகமூர்த்தி இளைஞர் கழக அணியும் மோதவுள்ளது.

(க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



தேசியமட்ட ஹொக்கிப்போட்டியில் பங்குபற்றிய பண்டத்தரிப்பு உயர்தரப்பெண்கள் பாடசாலை மாணவிகளை படத்தில் காணலாம். (க-20)

# கிரிக்கெட் போட்டி

புது வருடப்பிறப்பை முன்னிட்டு பளை ஸ்ரீபதி விளையாட்டு கழகம் அனலை FM ஊடக அனுசரணையில் "Green Arrows" வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டியை நடத்த வுள்ளது.

பச்சிலைப்பள்ளி பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 10 பந்து பரிமாற்றங்களுடன் அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டியாக இவை இடம்பெறவுள்ளது.

இதன் முதற்கட்டப் போட்டிகள் பளை பொது விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இம்மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் இடம்பெறவுள்ளது. (க-23)

# கூடைப்பந்தாட்ட போட்டி




சுன்னாகம் றோட்டரக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியொன்று இடம்பெறவுள்ளது.

இப் போட்டிகள் எதிர்வரும் 13. 14 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

ஆண். பெண் இருபாலாருக்குமான போட்டிகளாக இவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் றோட்டரக் கழகத்தின் தலைவி ஸ்ரீ ரங்கநாயகி அறிவித்துள்ளார்.

எனவே இப் போட்டிகளில் ஆர்வமுள்ள அணிகளை கலந்து கொள்ளுமாறு சுன்னாகம் றோட்டரக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (க-23)

# சர்ச்சையில் சிக்கிய அப்ரிடி



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் சகித் அப்ரிடி புதிய சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

வங்கதேசத்தில் நடந்து முடிந்த இருபது-20 உலகக்கிண்ண போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் முறையாக அரையிறுதி வாய்ப்பை இழந்து சூப்பர் 10 சுற்றோடு வெளியேறியது.

பாகிஸ்தான் அணி தாயகம் திரும்பிய போது விமான நிலையத்தில் பேட்டி அளித்த பாகிஸ்தான் வீரர் அப்ரிடி. மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் சிறந்த மனநிலையுடன் பாகிஸ்தான் அணி விளையாடவில்லை. இதுவே தோல்விக்கு காரணமாக அமைந்தது. எனவே அணித்தலைவர் பதவியை எனக்கு வழங்கினால். அதை சவாலாக ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன் என கூறியிருந்தார்.

போட்டி தொடரில் பங்கேற்று வரும் அணி தொடர்பாக அணித்தலைவர் மற்றும் குறிப்பிட்ட அணி நிர்வாகிகள் மட்டுமே ஊடகங்களிடம் பேச வேண்டும் என்ற கட்டுப்பாட்டை மீறி ஊடகங்களுக்கு பேசியதற்காக விளக்கம் கேட்டு அப்ரிடிக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் துண்டுபிரசுரம் அனுப்பியுள்ளது. (க)


# உதைபந்தாட்ட போட்டி

சண்டிலிப்பாய் பிரதேச செயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக பிரதேச இளைஞர் விளையாட்டு விழா 2014 இன் உதைபந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை மு.ப 8.30 மணிக்கு மானிப் பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளது.

எனவே பதிவு செய்யப்பட்ட அனைத்து கழகங்களை யும்தவறாது சமூகம் தருமாறு பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (க-23)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இப் போட்டியில் வீரர்கள் அறிமுகம் இடம்பெறுவதையும். கரபந்தாட்டப் போட்டியில் ஒரு கட்டத்தையும். வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (க-23)

# யுவிக்கு கெவின் ஆதரவு





விமர்சனங்களுக்கு மத்தியில் சிக்கி தவிக்கும் யுவராஜ்சுக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்த நிலையில், பீட்டர்சன் ஆதரவளித்துள்ளார்.

இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி இலங்கையிடம் தோற்றதற்கு யுவராஜ் சிங்கின் மோசமான துடுப்பாட்டமே காரணம் என்று வெகுவாக விமர்சனங்கள் எழுந்தது.

இந்நிலையில் சச்சின் டெண்டுல்கர், ஹர்பஜன்சிங்கை தொடர்ந்து, இங்கிலாந்து முன்னாள் வீரர் கெவின் பீட்டர்சனும் யுவராஜ் சிங்குக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.


இந்த ஐ.பி.எல் தொடரின் டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கெவின் பீட்டர்சன் நேற்று முன்தினம் டெல்லியில் கூறியதாவது,

'டுவிட்டர்' பக்கத்தில் யுவராஜ்சிங் குறித்து விமர்சிக்கப்பட்டிருப்பதை பார்த்தேன்.

இது தேவையற்ற ஒன்றாகவே நான் கருதுகிறேன். அதை ஏற்றுக் கொள்ள முடியாது. கிரிக்கெட்டில் எப்போதும் சிறப்பாக விளையாடி கொண்டிருக்க முடியும் என்ற எண்ணம் தவறானது.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் வெளியில் இருந்து விமர்சிப்பது மிகமிக எளிது. ஆனால் சர்வதேச கிரிக்கெட்டில் ஆடாத வீரர்கள் கூட விமர்சித்து பேசிக் கொண்டிருப்பதை நான் இப்போது பார்க்கிறேன் என்று கூறியுள்ளார். (க)

# சானியா, மலிக் உறவில் விரிசல்?



தனது கணவர் சொகைப் மலிக்குடன் எந்தவித கருத்து வேறுபாடும் இல்லையென சானியா மிர்ஸா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸா, பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொகைப் மலிக்கை காதலித்து திருமணம் செய்துகொண்டார்.

பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் இவர்களது திருமணம் 2010 ஆம் ஆண்டு ஐதராபாத்தில் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு சானியா மிர்ஸா தொடர்ந்து இந்தியாவிற்காக டென்னிஸ் விளையாடி வருகிறார். சொகைப் மலிக் கிரிகெட்டில் கவனம் செலுத்துகிறார்.

இந்த நிலையில் இவர்கள் இடையே நெருக்கம் குறைந்து வருவதாகவும், கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதனை சானியா மிர்ஸா திட்டவட்டமாக மறுத்துள்ளார். பாகிஸ்தானில் உள்ள தனது கணவர் வீட்டிற்கு சென்றுள்ள சானியா மிர்ஸா அங்கு ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

எங்களது திருமண வாழ்க்கை எளிதானது அல்ல. ஏனெனில் இருவரும் வெவ்வேறு நாட்டை சேர்ந்த, தொழில்முறை விளையாட்டு வீரர்கள்.

நாங்கள் ஒன்றாக சேர்ந்து இருப்பதற்கு போதுமான நேரம் கிடைக்காது என்பதை அறிவேன். ஆனால் இதுவரை அந்த நிலைமையை முடிந்தவரை சிறப்பாக கையாண்டு வருகிறோம். எங்களுக்குள் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.

திருமணமாகி 4 ஆண்டுகள் ஆனாலும், சொகைப் மலிக்கை நான இன்னும் அதிகமாக நேசிக்கிறேன் என்பதை உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது அடுத்த கட்ட போட்டிகள் தொடங்குவதற்கு முன்பு கணவருடன் 'ரிலாக்ஸ்' செய்து கொள்வதற்காக மாமனார் வீடு உள்ள பாகிஸ்தான் வந்துள்ளேன்.

மீடியாக்களின் தொந்தரவு இல்லாததால் இங்கு ஜாலியாக நேரத்தை செலவிட்டு வருகிறேன். ஆசைதீர சாப்பிடுகிறேன். ஷொப்பிங் சென்று மனதுக்கு பிடித்ததை வாங்குகிறேன்.

ஒரு முறை கடைவீதிக்கு சென்றபோது, ஒரு கடைக்காரருக்கு முதலில் நான் சானியா தானா? என்று ஆச்சரியம் ஏற்பட்டது. பிறகு எனது கணவருடன் என்னை பார்த்த பிறகு, அடையாளம் கண்டு என்னிடம் ஆட்டோகிராப் வாங்கினார். புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டார். (க)

# இருபது-20 போட்டியிலிருந்து மஹேல உத்தியோகபூர்வமாக ஓய்வு



இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரரும் அணியின் முன்னாள் தலைவருமான மஹேல ஜயவர்தன சர்வதேச இருபதுக்கு-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் தனது இராஜினாமா கடிதத்தினை இலங்கை கிரிக்கெட் சபையிடம் கையளித்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தினை இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வாவிடம் அவர் ஒப்படைத்துள்ளார். (க)

# இந்திய அணியை குறிவைக்கும் இங்கிலாந்து மகளிர் அணி

மகளிர் இங்கிலாந்து அணியின்டேனியல்யாட், ஹோலிக்கு விட்ட காதல் தூதை தொடர்ந்து சக வீராங்கனையான சாரா டெய்லர், ரவீந்தர ஜடேஜாக்கு 'டுவிட்' செய்துள்ளார்.

இருபது-20 உலகக் கிண்ணம் தொடங்கியதில் இருந்தே ஆடவர் இந்திய அணியினருக்கும், மகளிர இங்கிலாந்து அணிக்கும் ஏதோ இணைப் பிரியாத தொடர்பு நிலவி வருகிறது.

விராட் ஹோலியின் அதிரடி ஆட்டத்தால் கவரப்பட்ட இங்கிலாந்து மகளிர் அணியின் டேனியல் யாட் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு வெளிப்படையாக தெரிவித்து ரசிகர்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தினார்.

ஹோலி எந்த பதிலும் அளிக்காத நிலையில், ஹோலியின் தாயார் மறைமுகமாக தனது எதிர்ப்பை டேனியல் யாட்டுக்கு தெரிவித்திருந்தார்.

அந்த சலசலப்பு சற்றே ஓய்ந்திருந்த நிலையில், மறுபடியும் இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணியின் சாரா டெய்லரிடம் இருந்து இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு 'டுவிட்' வந்துள்ளது.

மகளிர் உலக கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணியும், ஆடவர் உலக கிண்ணப் போட்டியில் இந்தியாவும் இறுதிப்போட்டியில் விளையாடியது. ஆனால் இரண்டு அணியும் தங்கள் கிண்ணத்தை தவறவிட்டது. அன்றிரவு தான் டுவிட்டரில் இருவரும் தங்கள் கருத்துகளை பகிர்ந்துள்ளனர். (க)

# விஸ்டன் சஞ்சிகை சச்சினுக்கு கௌரவம்



'கிரிக்கெட்டின் பைபிள' எனப் புகழப்படும் 'விஸ்டன் கிரிக்கெட் அல்மோநேக்' புத்தகத்தின் அட்டைப் பக்கத்தில் ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர் சச்சினின் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டுக்கான 5 சிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவராக இந்திய தொடக்க வீரர் ஷிகர் தவான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

1878-ம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் வெளியாகிவரும் இபபுத்தகத்தில் நடப்பு ஆண்டில் கிரிக்கெட்டில் சாதித்தவர்களைப் பற்றிய தகவல்கள் இடம்பெற்றிருக்கும்.

அந்த புத்தகத்தின் 151-வது பதிப்பு நேற்று வெளியாகியுள்ளது. இதன் அட்டைப் பக்கத்தில் சச்சின் இடம்பெற்றுள்ளார்.

மும்பையில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தன் கடைசி டெஸ்டில் பங்கேற்று பெவிலியன் திரும்பும்போது, சச்சின் பேட்டை உயர்த்தி ரசிகர்களின் பாராட்டை ஏற்றுக் கொள்வது போன்ற படம் இடம்பெற்றுள்ளது.

'விஸ்டன் கிரிக்கெட் அல்மோநேக்' புத்தகத்தில் ஆண்டுதோறும் கிரிக்கெட்டில் சாதித்த 5 வீரர்கள் தேர்வு செய்யப்படுவர். நடப்பு ஆண்டுக்கான வரிசையில் ஷிகர் தவானும் அதில் இடம்பெற்றுள்ளார். அவரைத் தவிர்த்து, ஆஷஸ் தொடரில் அசத்திய அவுஸ்திரேலியாவின் ரியான் ஹாரிஸ், கிறிஸ் ரோஜர்ஸ், இங்கிலாந்தின் ஜோ ரூட் மற்றும் இங்கிலாந்து மகளிர் அணித்தலைவி சார்லோட் எட்வர்ட்ஸ் ஆகியோரும் சிறந்த வீரர், வீராங்கனையாகத் தேர்வாகியுள்ளனர்.

சம்பியன்ஸ் டிராபி மற்றும் மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்தில் சிறப்பாக செயல்பட்டதே ஷிகர் தவான்தேர்வுக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மனித உரிமைகள்...

துக்கொள்ளும் கலாசாரமொன்றைப் பற்றிய விசனங்களை மேலும மோசமாக்கியதுடன், நிறுவனங்கள் சிலவற்றுக்கு இருக்க வேண்டிய சுயாதீனத்தன்மையின் அளவும் படிப்படியாக அழிக்கப்பட்டது.

இழைக்கப்பட்டதாக கூறப்படும் போர்க்குற்றச் செயற்பாடுகளுக்கான பொறுப்புக் கூறும் கடப்பாடு, மனித உரிமைகளை கண்ணியப்படுத்தல் மற்றும் அரசியல்தீர்வொன்றை காணுதல் ஆகியவற்றையே பிரித்தானியா யுத்தத்திற்கு பின்னரான அத்தியாவசிய மூலக்கூறுகளாக பார்க்கின்றதெனவும் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாரதூரமான மனித உரிமைகள் குறித்து விவகாரங்களை உரிய முறையில் கையாளு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் பெண்கள் உரிமைகள் தேர்தல செயற்கிராமங்கள் மற்றும் சட்டவாட்சி ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பிக்கும் பொருட்டு சிவில் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுமாறும் பிரித்தானியா இலங்கை அரசைத் தொடர்ந்தும் வலியுறுத்தும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த வருடம் முதல் மூன்று மாதங்களுக்குமான மனித உரிமைகள் நிலைவரம் குறித்த இற்றைப்படுத்தல் ஒன்றில் கடந்த மூன்று மாதங்களின் போது இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரத்தில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை என்றே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வடபுலத்தில் சமூக ஆர்வலர்கள் தடுத்து வைக்கப்படுதல் மற்றும் தொந்தரவுக்குள்ளாக்கப்படுதல் பற்றிய முறைப்பாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளதாகவும் ஈண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலாண்டுப் பகுதியில் கருத்து வெளிப்பாட்டு சுதந்திர நிலவரத்திலும் முன்னேற்றம் காணப்படாத நிலையே இருந்தது.

இந்த வருடம் உலக பத்திரிகைச் சுதந்திரம் பற்றி 180 நாடுகள் இடையே நடத்தப்பட்ட ஆய்வில் இலங்கை 165-வது இடத்தைவகித்துள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் கடந்த 2011-ம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டிருந்த பிரித்தானிய பிரஜையான குராம் ஷெய்க்கின் படுகொலை விசாரணைகளில். சிறிது முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 26-ம் திகதி ஆரம்பமான நியாய விசாரணை எதிர்வரும் மாதங்களில் தொடரவுள்ளதாகவும் அதில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் தளபதி...

யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதியின் அழைப்பின் பேரில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் விசேட விமானத்தில் வந்து இறங்கிய பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் தளபதி உள்ளிட்ட குழுவினர் யாழ்.கட்டளைத்தளபதியுடனான சந்திப்பினையடுத்து நல்லூர்க் கந்தசுவாமி கோவில், யாழ்.பொது நூலகம், யாழ். கோட்டைக்கும் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

பாகிஸ்தான் தளபதியின் யாழ். வருகையை முன்னிட்டு இராணுவத்தினர் ஆயுதங்களுடன் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த அதேவேளை நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு வருகைதந்த போது இராணுவத்தினர் வாகனங்கள் சகிதம் சூழ்ந்ததோடு பலத்த பாதுகாப்பும் வழங்கியிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் இராணுவப்படைகளின் எண்ணிக்கை குறித்து இலங்கைக்கு விஜயம் செய் துள்ள பாகிஸ்தான் கூட்டுப் படைகளின் தலைமைத்தளபதி ஜெனரல் ரஷாட் மஹ்மூத்திடம் யாழ்.மாவட்ட இராணுவக்கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா விளக்கமளித்துள்ளதாகவும் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. (செ-6)

## உள்ளக பொறிமுறை...

ஜனநாயகவாதிகள் தடுமாற்றம் அடையும் போது சர்வாதிகாரிகளுக்கு உற்சாகம் ஏற்படுகின்றது என்பதை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அண்மையில் இடம்பெற்ற இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது இந்தியா உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வதற்கான தீர்மானம் ஒன்று அண்மையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

"அராஜகங்கள் இடம்பெறும் போது அல்லது மனிதவுரிமைகள் மீறப்படும் போது நாங்கள் நடுநிலையைப் பேணமுடியாது" என இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு கூறியிருந்தார்

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கான ஆட்சி உரிமைகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வராதமை தொடர்பில் இந்திய அரசாங்கம் எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை. இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு எவ்வித எதிர்ப்பையும் வெளிப்படுத்தாது அமைதியைப் பேணுகிறது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருப்பதன் மூலம் மனிதவுரிமைகளைப் பாதுகாக்கின்ற என்ற இந்தியாவின் கொள்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்கும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை படைத்தரப்பினரால் விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, அப்பாவி தமிழ் மக்களும் படுகொலை செய்யப்பட்ட ஆதாரங்களை சனல் 4 தொலைக்காட்சி வெளியிடாதிருந்திருந்தால், இலங்கையில் உண்மையில் என்ன நடந்தது என்பது உலக நாடுகளுக்கு தெரிந்திருக்காது. இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாகும்.

வடக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியப் பிரதமர இந்திரா காந்தியின் காலத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்திய அரசாங்கம் தற்போது இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பைச் சம்பாதிக்கின்ற எந்தவொரு காரியத்திலும் ஈடுபட விரும்பவில்லை.

இலங்கையைப் பகைப்பது சீனாவுக்கு சாதகமாக அமைந்துவிடும் என இந்தியா கருதுகிறது. ஆனால் இலங்கை அரசாங்கத்தை சமாதானப்படுத்தி தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதாக நாங்கள் எவ்வளவு காலம் வாக்குறுதி அளிக்க முடியும்?

இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பதிலளிக்கத் தவறும் பட்சத்தில் நாம் அது தொடர்பில் கேட்க முடியும். ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் இந்தியா ஆதரித்திருந்தது. ஆனால் இவ்விரு தீர்மானங்கள் தொடர்பிலும் இலங்கை அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்த மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உள்ளக விசாரணைப் பொறிமுறையை அமைத்து பதிலளிக்க முடியும் என்பது இந்தியாவின் வாதம். ஆனால் அதற்கான காலம் கடந்துவிட்டது. இலங்கையில் வாழும் தமிழ் மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் இலங்கை அரசாங்கத்துடன் இந்தியா அமைதி பேணுவது வெட்கப்பட வேண்டிய விடயம் என இக்கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## தாயும் மகளும்...

அண்மைக்காலமாக வட மாகாணத்தில் இடம்பெற்று வரும் இராணுவ சுற்றிவளைப்புகள், தேடுதல்களின்போது, பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் பெண்கள் அதிக அளவில் கைது செய்யப்படுவதைப் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு என்ற அமைப்பு கண்டனம் வெளியிட்ட அன்றைய தினம் இரவு வவுனியாவில் இந்தப் பெண்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் ஜெயக்குமாரி என்ற பெண்ணும், அவருடைய 14 வயதான மகள் விபூசிக்காவும் சில வாரங்களுக்கு முன்னர் படையினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பயங்கரவாதத்திற்கு மீண்டும் உயிரூட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்பவர்களுக்கு உதவி வருகின்றார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இதுவரை பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இதுவரை 65 பேர் இப்படியான குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாக காவல்துறை பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். அவர்களில் 5 பேர் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும், எஞ்சியுள்ள 60 பேரில் 10 பேர் பெண்கள் என்றும் அவர் செய்தியாளர்களிடம் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் கைதான நபர்கள் அடிப்படை வசதிகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அதில் கர்ப்பிணியான ஒரு பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது அவருக்குக் கருச்சிதைவு ஏற்பட்டிருந்தது என்றும் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு என்ற அமைப்பு குற்றம் சுமத்தியிருந்ததையும், வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு அந்த வசதிகள் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் நிராகரித்திருக்கின்றார். (செ-11)

## பிரதான விளக்குகளை...

ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் இரண்டு மாதங்களுக்குள் 820 உயிராபத்துடைய மற்றும் பாரதூரமான மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் பதிவாகியிருந்தன.

ஆயினும், இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 670 விபத்துகளே பதிவாகியிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், இத்திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் விபத்துக்கள் குறைய வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார். (செ-11)

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -
Only Official FRENCH Centre
af பிரெஞ்சு மொழி கற்பதற்கு af Alliance Française de Jaffna
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கீகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITZERLAND செல்பவர்கள். FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள்; விரைவில்...உடன் பதிவுசெய்யுங்கள்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

சிறுவர்களுக்கான இலவச ஆங்கிலக் கற்கைநெறி
ஆரம்பம் 12-04-2014 காலை 9.00 மணி
6-12 வயது வரையான சிறுவர்களுக்கான
இரு வாரங்கள் அடங்கிய முழுநேர கற்கை நெறி
கற்கைநெறி இறுதியில் சர்வதேச தர சான்றிதழ் வழங்கப்படும்
முன்னாள் சர்வதேச நிறுவன மொழிபெயர்ப்பாளரும்
UK QUALIFIED ஆங்கில ஆசிரியர் K.KETHEES அவர்களின் கற்பித்தலில்
அதிரடி கட்டணக் கழிவுடன் A/L மாணவர்களுக்கான
SPOKEN ENGLISH (03 Months)
கற்கைநெறிக் கட்டணம் 3000/= மட்டுமே
ELTCStudies (Pvt)Ltd. சர்வதேச பாடசாலையின் அனுசரணையுடன்
கதிர் கல்வி நிறுவனம் புத்தூர்ச் சந்தி(பால்சாலை முன்பாக) 0772208173 (C-6995)

DCM A/L 2016
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
வர்த்தகப் பிரிவு
பொருளியல் - S.வரதராஜன்
கணக்கீடு - P.பகீரதன்
வணிகக் கல்வி - V.முரளி
ஆரம்பம் : 12 - 04 - 2014
சனி 9.00 am (C-6993)

பேக்கரி உரிமையாளர்கள், கேக் தயாரிப்பாளர்கள், பிஸ்கற் தயாரிப்பாளர்களின் கவனத்திற்கு!!!
காலம் காலமாக தரத்தில் உங்கள் நம்பிக்கையை வென்ற றோயல் பேக்கிங் பவுடர் தற்பொழுது 01Kg பைக்கற்றில் !! மிருதுவான கேக் தயாரிப்பதற்கும், அனைத்து வகையான பேக்கரி மற்றும் பிஸ்கற் தயாரிப்புகளிற்கும் இன்றே பாவியுங்கள். தரத்திற் சிறந்த விலையில் குறைந்த
"றோயல் பேக்கிங் பவுடர்"




Manufactured By:-
Royal Industries
No.22, 1/1, Adamally Building,
Wolfendhal Street, Colombo-13.
ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் (C-6992)

CCA
சுன்னாகம்
A/L 2016 (6117)
கலை, வர்த்தகப் பிரிவுகள் நடைபெறுகின்றது.

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2016 கலை, வர்த்தக, தொழில்நுட்ப
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
12-04-2014 சனி காலை 9.00 மணி

யாழ் மண்ணில்
மெற்றோ
தொழில்நுட்பக் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
( பொருளியற் கல்லூரியின் இணை நிறுவனம் )
வடபுலத்தில் இப்பிரிவுக்கென ஒரு தனித்துவமான நிறுவனம்
A/L -2016
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன
தொழில்நுட்பப் பிரிவு
இத்துறை சார்ந்த உயர் தொழில்நுட்ப விரிவுரையாளர்களும், பிரபல பாடசாலை ஆசிரியர்களும் இணைந்து கற்பிக்கின்றார்கள்.
Engineering Technology
* Mr. S. ஜெயக்குமார் (Mechanical Engineer)
* Mr. S. சபேஷன் (Electrical and Electronic Engineer)
* Mr. A. நிக்கலஸ் ( Dip in Design and Technology)
Science for Technology
Mr. T. பிரதீபன் (B.Sc (Hons) Ch spl. PGDE)
* Mr. R. குகாநந்தன் (B.Sc. PGDE, MEd)
* Mr. M. அம்பிகைபாகன் (B.Sc, PGDE, MEd)
* Mr. A. ரவீந்திரன் (B.Sc, M.Sc in Education)
Bio System Technology
* Mr. M. விஷ்ணுதேவன் (B.Sc Agric.)
Mr. V. செந்தில்நாதன் (B.Sc Hons Agric.)
English
* Mr. N. நிஷாந்தன் (Dip in English)
* Mr. S. ஜைசன் (B.B.A (HRM) spl)
(C-6998)
* ஏனைய தொகுதிப் பாடங்கள் அனைத்தும் நடைபெறுகின்றன.
* உங்கள் அனுமதிகளை பொருளியற் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
* A/L -2015 சனி, ஞாயிறு வகுப்புகள் நடைபெறுகின்றன.

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே,எஸ் றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L 2016
கலை, வர்த்தகப் பிரிவு
மீண்டும் புதிய பிரிவு
நாளை 12-04-2014 சனி
Note : எமது மற்ற நிறுவனமான
BARATHY சித்தன்கேணி
அனைத்துப் பிரிவுகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
★ உங்கள் அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடத்தில் பெற்றுக் கொள்ளவும்.
(C-6998)

BEACON வெலிங்டன் சந்தி யாழ்
A/L 2016
கலை - வர்த்தக தொழில்நுட்பப் பிரிவுகள்
புதிய பிரிவு ஆரம்பம் 12.04.2014 நாளை காலை 9 மணி
(C-6997)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.